★ விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஆனி 25 ஷவ்வால் 9 இதழ் 145
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 9-7-84


## கண் தோண்டும் கோஷ்டி
## மட்டக்களப்பில் கைது!

(மட்டக்களப்பு)

காத்தான்குடியில் சிறுவனொருவனின் கண்களைத் தோண்டுவதற்கு முயன்ற ஒரு கோஷ்டியினர் பொலிசாரிடம் அகப்பட்டனர்.

இச்சம்பவம்பற்றிகூறப்படுவதாவது:

நேற்று மாலை காத்தான்குடியில் மொறிஸ்மைனர் காரில் வந்த மூவர் அவ்விடத்தில் விளையாடிக் கொண்டிருந்த மன்சூர் என்ற சிறுவனை அழைத்து காத்தான்குடி ஐஸ் வாடியைக் காட்டுமாறு கூட்டிச் சென்றனராம். சிறுவன்காரில் ஏறியதும் மட்டக்களப்பு நகருக்கு அழைத்துப் போவதாக காரில் இருந்தவர்கள் சிறுவனிடம் கூறினார்களாம்.

சிறுவன் பயத்தால் சத்தமிடவே அவ்வூர் பொதுமக்கள் துரத்திச் சென்று காரை மடக்கி சிறுவனைக் காப்பாற்றி காரிலிருந்தமூவரையும் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பொலிசாருக்கு கிடைத்த தகவலின்படி இந்தக்கோஷ்டியினர் சிறுவனின் கண்களைத் தோண்டும் முயற்சியில் சிறுவனைக் கடத்தியிருக்கலாம் எனத் தெரிய வந்துள்ளது

இது தொடர்பாக பொலிசார்புலன்விசாரணைசெய்துவருகிறார்கள். அந்தமூவரும் பொலிஸ்பாதுகாப்பில் உள்ளனர். (சூ)

# சரக்கு ரயில் தடம்புரண்டது!
# கொழும்பு சேவை பாதிப்பு

## நாசவேலை காரணமா?

(வவனியா)

**யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற சரக்கு ரயில்வண்டி நேற்று முன்தினம் ஓமந்தைக்கு அருகில் தடம் புரண்டது. இதன் விளைவாக வடபகுதிக்கான ரயில் போக்குவரத்துச் சேவைகள் சீர்குலைந்துள்ளன.**

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற யாழ்.தேவி ரயில் புளியங்குளத்தில் நிறுத்தப்பட்டு பிரயாணிகள் பஸ்மூலம் வவனியா வந்து பின்னர் அநுராதபுரத்திலிருந்து வந்த விசேட ரயிலில் கொழும்பு சென்றனர்.

இந்த விபத்துக்கான காரணம் பற்றி உடனடியாகத் தெரிவிக்கப்படாத போதிலும், நாசவேலை காரணமாக இருக்கலாமா என்ற சந்தேகமும் நீக்கப்படவில்லை. விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

**பிந்தியசெய்தி**

நேற்றிரவு கிடைத்த தகவலின்படி ரயில்பாதை திருத்த வேலைகள் இன்றுகாலை முடிவடையலாம் என்றும் 'இன்ரசிற்றி' ரயில்சேவை யாழ்ப்பாணம் வரை நடைபெறலாம் என்றும் தெரியவருகிறது.

## வடபகுதி தமிழ்தீவிரவாதிகள் 400 பேர் கைது

### 'லலித்' கூறுகிறார்

(கொழும்பு)

''தமிழ்நாட்டில் பயிற்சி பெற்ற சுமார் 400 தமிழ்த் தீவிரவாதிகள் கைதுசெய்யப் பட்டுள்ளார்கள்'' என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி குறிப்பிட்டுள்ளார்.

தம்புள்ளையில் நடைபெற்ற பாடசாலை மாணவர்களின் கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

வடபகுதி பயங்கரவாதிகள் போதைப் பொருள் கடத்தும் வேலையிலும் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றார்கள். அவர்கள் இதன் மூலமே தமது இயக்கத்துக்கு பணம் சேகரிக்கின்றார்கள்'

'இவர்கள் இன்று தொடக்கம் தென்பகுதி மக்களை தூண்டிவிடும் நடவடிக்கைகளில் இறங்கவுள்ளார்கள். இதன் மூலமே அவர்கள் தமது இலட்சியத்தை அடைய முனைகின்றார்கள். இதுகுறித்து தென்பகுதி மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்' என்றும் அவர் குறிப்பிட்டார்

## கருணாநிதி கைது விவகாரம்: அரசுக்குத் தொடர்பில்லை

### எம். ஜி. ஆர். கருத்து

(சென்னை)

'தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதி கைது செய்யப்பட்டது, அரசின் கட்டளைப்படி அல்ல அவர் நீதிமன்றக் கட்டளைப்படியே கைது செய்யப்பட்டுள்ளார்' என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார்,

'கருணாநிதி நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமையாது நடந்துள்ளார். பலதடவைகள் அவர் நீதிமன்றத்திற்கு செல்லாத காரணத்தினாலேயே அவர் கைது செய்யப் பட்டுள்ளார். இது மட்டுமின்றி நீதிமன்ற உத்தரவோடு கைது செய்வதற்குச் சென்ற பொலிசாரையும் அவரது தொண்டர்கள் தாக்கி கலகம் செய்துள்ளனர். இவை எல்லாம் கருணாநிதியின் சட்டத்தை மதிக்காத தன்மையை எடுத்துக் காட்டுசின்றன' என்றும் தமிழக முதலமைச்சர் நேற்று சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

## சீனவிமானப் படைத்தளபதி இலங்கை விஜயம்

(கொழும்பு)

சீனாவின் விமானப்படைத் தளபதியும். நான்கு உயர் அதிகாரிகளும் கொண்ட குழுவினர் 7 நாள் அரசமுறைப் பயணமாக நேற்று இலங்கை வந்துள்ளனர்.

இவர்கள் இலங்கையில் தங்கியிருக்கும் நாள்களில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, முப்படைத் தளபதிகள் ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்துவார்கள்.

## தமிழக அமைச்சர்கள்: இலாகா பொறுப்புமாற்றம்

(சென்னை)

தமிழ்நாடு அமைச்சர்களின் இலாகா பொறுப்புக்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு எம். ஜி ராமச்சந்திரன் அறிவித்துள்ளார்.

நிதி அமைச்சர்பதவியுடன் வருவாய்த்துறை அமைச்சு பொறுப்பையும் திரு. ஆர். நெடுஞ்செழியன் ஏற்றுள்ளார்

வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரத்திற்கு உணவு, விலைக்கட்டுப்பாட்டு அமைச்சு பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளது.

வணிகவரித்துறை அமைச்சுப்பொறுப்பை முதலமைச்சர் திரு. எம். ஜி ராமச்சந்திரன் ஏற்றுள்ளார்

உள்ளூராட்சித்துறை அமைச்சர் திரு. பி. குழந்தைவேலு சத்துணவுத்திட்ட அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சத்துணவுத்திட்ட அமைச்சர் திரு சௌந்தரராஜன் உள்ளூராட்சித்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ளார். (வெ)

## அந்த மூன்று சடலங்கள்

### குற்றச்செயல்பற்றி துண்டுப்பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

சமூகவிரோதக் குற்றச் செயல்களுக்காக மூவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். கொட்டடியைச் சேர்ந்த அருளானந்தம் சிறீசத் அருளானந்தம், பிறேமானந்த், செல்லத்தம்பி கனகேஸ்வரன் ஆகியோருக்கே இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள இத்துண்டுப் பிரசுரத்தில்; இவர்கள் இழைத்த குற்றச்செயல்களும் குறிப்பிடப்பட்டுள்ளன

ஐந்துசந்திக்கு அருகிலும், தட்ட தெருச்சந்தி, னுநிட்டியிலும் காணப்பட்ட மேற்படி சடலங்களை நேற்றுக்காலை பெருந்திரளானவர்கள் பார்த்துச் சென்றனர்

## "இலங்கையின் இனப்பிரச்னை:
## வன்முறைத் தீர்வில் எமக்கு நம்பிக்கை இல்லை"

### இந்திய வெளிவிவகார அமைச்சர் கருத்து

புதுடில்லி, ஜூலை 8

''இலங்கையின் இனப்பிரச்னைக்கு வன்முறை மூலம் தீர்வு காண்பதில் இந்தியாவிற்கு நம்பிக்கையில்லை. இப்பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதையே இந்தியா விரும்புகிறது''

இவ்வாறு இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் இலங்கை பத்திரிகையொன்றிற்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் அப்பேட்டியில் தொடர்ந்து தெரிவித்துள்ளதாவது:

'அண்டை நாடான இலங்கையின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் இந்தியா ஆதரிக்கிறது.

'இந்தியாவில் தங்கியுள்ள 40,000 இலங்கை அகதிகளும் தாயகம் திரும்புவதற்கான சூழ்நிலையை இலங்கை அரசு உருவாக்க வேண்டும்,

'வரலாற்றுத் தொடர்புகளும், அகதிகளின் வருகையுமே இந்தியாவில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன. இவற்றின் காரணமாகவே இந்

(8ம் பக்கம் பார்க்க)

## இலங்கை வீரர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

'லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்போட்டிகளில் கலந்து கொள்ளும் இலங்கைவீரர்கள் யாவரும் கொல்லப்படுவார்கள்' என்று அமெரிக்காவிலுள்ள தூய வெள்ளையர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 'கூக்ளக்ஸ்கிளான்' இயக்கம் எச்சரிக்கை செய்துள்ளது.

இந்த இயக்கம் இலங்கை ஒலிம்பிக் கட்டுப்பாட்டுச் சபைக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் 'மனிதர்களுக்குத்தான் விளையாட்டு, குரங்குகளுக்கு அல்ல' எனக் குறிப்பிட்டு இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளதாம்.

இதே போன்ற எச்சரிக்கை மலேசியாவுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாம் (சூ)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மிருசுவில், பாம் வீதி (Farm Road) மேற்குப்பகுதியில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்திற்கு அருகில் 2 பாரிய கிணறுகள், தென்னை செவ்விளநீர் பிள்ளைகள், மா, பலா, தோடை உட்பட 4 (நாலு) ஏக்கர் கமம்செய்யத் திறமான தோட்டம் விற்பனைக்குண்டு. விபரம்: K. B. சுந்தரம், நா. சாம்பசிவம் அன் கோ. 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 725

கற்பூர வில்லைகள் அடிக்கும் இயந்திரம் விற்பனைக்குண்டு. ஒரு நிமிசத்திற்கு ஐம்பத்தி ஐந்து வில்லைகள் அடிக்கும். அ.கனகசிங்கம், சொனிக்ஸ் வீடியோ சென்ரர், (சந்தைக் கருகாமையில்) மானிப்பாய். 744

டாக்டரின் சொந்தப் பாவிப்பிலுள்ள 3 சிறீ மொறிஸ் ஒக்ஸ்போட் கார் சிறந்த நிலையில் உடன் விற்பனைக்குண்டு. மகப்பெறுவும் பிணிதீர்மனையும், சந்தைச்சதுக்கம், சங்கானை. 746

'செற்ஞ பாம்' ஒரு நாள் பேட்டுக்குஞ்சும் (B300, B380) ரோஸ் புறொயிலர் குஞ்சும், சாவற்குஞ்சும் 17/7/84 இல் விநியோகிக்கப்படும். தேவையானோர் முன்கூட்டியே பதிவு செய்யவும் விபரங்களுக்கு: R.S.K.Industries R.Sகிருஷ்ணமோகன். முருகபதி, உடுவில்.கவுரி போறேஸ் ஸ்டோாஸ் யாழ்ப்பாணம்.சிக்ஃன்கைன்ஸ் யாழ்ப்பாணம். 756

Bairaha Farms வெள்ளை, பிறவுண் பேட்டுக்குஞ்சுகள் சேவற்குஞ்சுகள் யூலைமாதம் 16, 30 ந் திகதிகளில் விநியோகிக்கப்படும் பதிவு செய்க. சற்குணராசா அன் பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில், 380

A/L, O/L வகுப்புகளுக்கான மாதிரி வினத்தாழ்கள் (Tutorials) விற்பனைக்குண்டு V. P. P. ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும். Bond Institutes, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Phone:24258. (736)

நல்லூர் கோவிலுக்கு அண்மையில் நாயன்மார் வீதியில் 1 1/2 பரப்புக் காணி வீட்டுடன் சகல வசதியுடன் விற்பனைக்குண்டு. உரிமையாளர்- சுந்தரலிங்கம், 12, நாயன்மார் வீதி, நல்லூர். (776)

## விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியில் ஆனைப்பந்திக்கும்நல்லூருக்கும் இடையில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: C. S. சண்முகலிங்கம், ஸ்ரீலங்கா அச்சகம், 234A, K. K.S.றேட், யாழ்ப்பாணம். (777)

கிளிநொச்சி கண்டிவீதியிலிருந்து வில்சன் வீதியில் 1ம் கட்டையருகில் வீடுகட்டுதற்குகந்த 1 ஏக்கர் மேட்டுக்காணி விற்பனைக்குண்டு. விளம்பர இல: 714, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். (714)

## தேவை

யாழ். நகரில் றேடியோ திருத்தும் வேலைத்தளத்திற்கு அனுபவம்மிக்க வேலை ஆட்கள் தேவை. தொடர்பு: விளம்பர இல: 774,C/o ஈழநாடு,யாழ்ப்பாணம். [774]

புடவை வியாபாரத்தில் அனுபவமுள்ள ஆண்/பெண் இருபாலாரும் தேவை. அனுபவமுள்ளவர்கள் நேரில் தொடர்கொள்ளவும். த. சங்கரப்பிள்ளை அன் சன்ஸ், யாழ்ப்பாணம். 771

குருநகரில் இருக்கும் ருல் வாடிக்கு ருல் கிறேடிங் தெரிந்த பெண் பிள்ளைகள் உடன்தேவை. அனுபவசான்று இதழ்களுடனும் கிராமசேவையாளரின் நற்சான்று பத்திரத்துடனும் விண்ணப்பிக்கவும். முகவரி: எடிசன், மே/பா மேரிறேஸ், 129, 2ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். நேர்முக பரீட்சை 14ம் திகதி காலை 8-00 மணிக்கும் 10-00 மணிக்குமிடையில் நடைபெறும். 758

## நன்றி

கற்கோவளத்தைச் சேர்ந்த ஏரம்பு இராசநாயகம் ஆகிய என்னுல் வல்லையில் கைவிடப்பட்ட பெறுமதி வாய்ந்த பொருட்கள் அடங்கிய கைப்பை (Purse) 203, கண்டிவீதி, அரியாலை "Siv Refrigation, Engineers," நிறுவனத்தினரால் கண்டெடுக்கப்பட்டு திருப்பி ஒப்படைக்கப்பட்டது. இவர்கட்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். [755]

## தவறிவிட்டது

26-6-84 அன்று யாழ்ப்பாணம் ஸ்ரான்லி றேட்டில் சாரதி அனுமதிப்பத்திரமும், தேசிய அடையாள அட்டையும் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்துக்கு தொடர்புகொள்ளவும். க. பேரம்பலம், கச்சாய் றேட், கொடிகாமம்.சன்மானம் வழங்கப்படும். (775)

## கல்வி

G. C. E. (A/L) தூய/பிரயோக கணிதம், சிறப்புப் பட்டதாரி ஆசிரியரினுல் கிழமை நாட்களில் மாலை நேரத்திற் கற்பிக்கப்படும். சிறு குழுக்கள் ஒழுங்குசெய்யலாம். இடம்: யாழ்ப்பாணம், சுண்டிக்குளி. மாணவர் தொகை இடம் என்பன குறிப்பிட்டுத் தொடர்புகொள்ளவும். விளம்பர இலக்கம் 663, C/o ஈழநாடு. 663

G. C. E. (O. L) கணிதம் 15 வருட அனுபவம்பெற்ற ஆசிரியரினுல் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்காக குறைந்தகாலத்தில் வீடுகளிற் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10,கச்சேரி ஒழுங்கை, சுண்டிக்குழி. 767

கலர் பிலிம் இனும்!
விபரங்கள் நேரில்
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

## பெயர் மாற்ற அறிவித்தல்

3-ம் வட்டாரம், வேலணை கிழக்கு என்ற விலாசத்தில் வசிக்கும், கந்தையா கந்தசாமி ஆகிய எனது மகன் ''சுரேஸ்'' என்பவருடைய பெயரை ''சுரேஸ்குமார்'' என்று மாற்றம் செய்கின்றேன். இதை பொதுமக்களின் தகவலுக்காக அறியத்தருகின்றேன்.

கந்தையா கந்தசாமி.
781

## கரைச்சி தெற்கு ப.நோ.கூ சங்கம் கிளிநொச்சி
## புதிய இசுசு லொறிக்கு முன்பக்க கப்(கூட்) மட்டும் அடிப்பதற்கான கேள்வி

புதிய லொறி ஒன்றிற்கு செசியில் எரிபொருள் ஏற்றும் 2000 கலன் கொள்ளசு கூடிய பௌசர் வைத்துப் பூட்டக்கூடிய விதத்தில் முன்பக்க கப் (கூட்) மட்டும் அடிப்பதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் இச்சங்கத்தில் பெறப்படும் விண்ணப்பப் படிவத்தில் 16-7-84 நண்பகல் 12-00 மணிக்கு முன்பாக பதிவுத்தபால் மூலமாகவோ நேரிடையாகவோ இடது மேல் மூலையில் பொடி அடிப்பதற்கான கேள்வி எனக்குறிப்பிட்டு பொது முகாமையாளர் கரைச்சி தெற்கு ப.நோ.கூ சங்கம் கிளிநொச்சி என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

பொது முகாமையாளர்
780

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

மதவடி தொண்டமனுற்றைச் சேர்ந்த கணபதி சடாச்சரம் என்பவரின் மரணசாதனமில்லாத ஆதன விடயத்தில், கணபதி சடாச்சரம் கைம்பெண் புவனேஸ்வரி மதவடி, தொண்டமனுறு.

மனுதார்

இல: 1195/ரீ

எதிராக

1. கணபதி சடாச்சரம் மகள் லதா
2. கணபதி சடாச்சரம் பிரபாகர்
3. கணபதி சடாச்சரம் பிரதீபன், எல்லோரும் மதவடி, தொண்டமனுறு.
4. கோபால் தனசேகரம் கம்பர்மலை, வல்வெட்டித்துறை.

எதிர்மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட இறந்து போனவரின்மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டதென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984ம் ஆண்டு ஆனி மாதம் 18ம் திகதியன்று மு.ப 9-45 மணிக்கு அல்லது இத்திகதிக்கு முன்பு இந் நீதிமன்றின் முன்னர் தோற்றி இவ் வழக்கில் பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படக் கூடாதென்பதற்கு காரணம் ஏதும் இருப்பின் காட்டுமாறு தேள்வைப்படுத்தப்படுகின்றார்.

1984ம் ஆண்டு ஆனி மாதம் 6ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
**றிச்சேட் ஜெயராசசிங்கம்**
பதிவாளர்

வரைவு
**வ.செல்லையா**
மனுதாரின் சட்டத்தரணி
19-6-1984

காரணம் காட்டும் திகதி 3-8-84க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

**றிச்சேட் ஜெயராசசிங்கம்**
பதிவாளர்
438

## வெற்றுச் சாக்கு ஏல விற்பனை

திருநெல்வேலியில் உள்ள யாழ் உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் (திருநெல்வேலி அரச பண்ணைக்குச் சமீபத்தில்) 3000 வெற்றுச் சாக்குகள் 1984ம் ஆண்டு ஆடி மாதம் 11ம்திகதி பி.ப 1-00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். கொள்வனவு செய்வோர் உடன் முழுப் பணத்தையும் செலுத்த வேண்டும்.

**ச.கிருஷ்ணபிள்ளை**
உதவி விவசாயப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்

4-7-84
698

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை புலோலி கிழக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி பாலசிங்கம் என்பவரின் மரணசாதனமில்லாத சொத்து விடயத்தில்:-

மரணமெய்தியவர்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

பாலசிங்கம் சிவச்செல்வம், புலோலி கிழக்கு. பருத்தித்துறை.

மனுதார்

மரணசாதன
நியாயாதிக்க வழ இல: 1197

எதிராக

1. பாலசிங்கம் சிவநேசன்
2. பாலசிங்கம் சிவகுமார் இருவரும் புலோலி கிழக்கு, தற்காலம் சவூதியரேபியா தமது சகோதரனும் அற்றேனித்தத்துவகாரனுமாகிய மேற்குறித்த மனுதார் மூலம் தோற்றம்.
3. பாலசிங்கம் மகள் சிவகுமாரி
4. சிவகுருநாதன் நாகேந்திரன்
5. பெண் சிவசோதி, புலோலி கிழக்கு பருத்தித்துறை.

எதிர்மனுதாரர்கள்

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கில் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில்தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984ம் ஆண்டு ஆடி மாதம் 27ம் நாள் அன்று முற்பகல் 10-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1984ம் ஆண்டு ஆனி மாதம் 21ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி
**றிச்சேட் ஜெயராசசிங்கம்**
பதிவாளர்

வரைவு
**V.மகாதேவா**
மனுதாரின் சட்டத்தரணி
764

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

குறேஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை
(Cross International Telecommunication Services)

FOR ALL INTERNATIONAL AND LOCAL DIRECT DIALLING TELEPHONE CALLS.

INTERNATIONAL TELEX SERVICES :- NO DELAY AT ALL. CHEAP RATES, CONTACT US RIGHT NOW.

குறேஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை.
(i) சர்வதேச, உள்ளூர் நேரடி தொலைத்தொடர்பு சேவை
(ii) சர்வதேச ரெலெக்ஸ் சேவை.

உலகின் எப்பாகத்திற்கும் குறைந்த கட்டணத்தில் நேரடிச் சர்வதேச தொலைத்தொடர்பு சேவையும், ஒரு நொடிப்பொழுதில் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

CTS

Cross International Telecommunication Services
STAGE II. FIRST FLOOR, BUS STAND CENTRE ROAD, MODEL MARKET, JAFFNA.
Phone No: 22040, 22065. Telex No: 22207 (C, T, S,)

பொது நூலகம் யாழ்ப்பாணம்

★ நைஜீரியப் பிரமுகர் டிக்கோ கடத்தல் விவகாரம்:

# பிரிட்டிஷ், நைஜீரிய விமானங்கள் மீதான தடை நீக்கப்பட்டது!

## கடத்தலுக்கு இஸ்ரேலிய கூலிப்படைஉதவி!

லண்டன், ஜூலை 8.

நைஜீரியப் பிரமுகரான டிக்கோ என்பவரைக் கடத்த எடுத்த முயற்சி தொடர்பாக பிரிட்டனில் தடுத்துவைக்கப்பட்டிருந்த நைஜீரிய விமானமும், இந்நடவடிக்கையை கண்டிக்கும் வகையில் நைஜீரியாவில் 'லேகோஸ்' நகரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பிரிட்டிஷ் விமானமும் நேற்று விடுவிக்கப்பட்டன.

பிரிட்டனில் இருந்து நைஜீரியாவைச்சேர்ந்த பிரமுகரான டிக்கோநைஜீரியாவுக்குக் கடத்தப்படவிருந்தார். இவர் நைஜீரியாவின் முன்னாள் அதிபர் ஷேகோசகாரி தலைமையிலான அரசாங்கத்தின் நெருங்கிய சகாவென்றும், அவ்வரசாங்கத்தில் ஒரு அமைச்சராகவுமிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தற்போதைய அரசாங்கம் கடந்தஅரசாங்கத்தின் மோசடிகள் சில தொடர்பாக இப்பிரமுகர் மீதும் வலை விரித்திருந்ததாம். ஆனால் இவர் நைஜீரியாவிலிருந்தும் தப்பிவந்து பிரிட்டனில் தஞ்சம் புகுந்திருந்தார்.

எனவே இவரை மீண்டும் நைஜீரியாவுக்குபலாத்காரமாக கொண்டுசெல்லும் வகையிலேயே இவர்கடத்தப்படவிருந்தார் என்று ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிசார் கருதுகின்றனர்.

திரு. டிக்கோ பெரும் பெட்டியொன்றில் மோசமான முறையில் போதையூட்டப்பட்ட நிலையில் அடைத்து வைக்கப்பட்டிருந்தார். விமான நிலையத்தில் இப்பெட்டி நைஜீரிய விமானச் சேவை விமானமொன்றில் ஏற்றப்படவிருந்தது. அங்கு இப்பெட்டிமீது சந்தேகம்கொண்டு இதனைத் திறந்து பார்த்தபோதே இதனுள் அவர் மயங்கிய நிலையில் இருக்கக் காணப்பட்டார். இதனைத்தொடர்ந்து அவர் உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு தீவிரசிகிச்சைக்குள்ளாக்கப்பட்டார்.

அவர் வைக்கப்பட்டிருந்த பெட்டியை எடுத்துச் செல்லத் தயாராகவிருந்த அந்த நைஜீரிய விமானமும் பிரிட்டிஷ் பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டது

விசாரணைகளின்போது திரு. டிக்கோவைக் கடத்துவதற்கு கூலிப்படையினர் அமர்த்தப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அக்கூலிப்படையினர் இஸ்ரேலியர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

இவ்ஆட் கடத்தல் நடைபெறவிருந்த சமயம் பிரிட்டனில்உள்ளநைஜீரிய தூதராலய வாகனங்கள் சிலவும் லண்டன் விமான நிலையத்தில் நிற்கக் காணப்பட்டன. இதனால் இக்கடத்தல் நைஜீரிய அரசின் ஒரு ஏற்பாடே எனக் கருதப்பட்டது.

ஆனால் பிரிட்டனில் உள்ள நைஜீரியத் தூதுவர் இவ்ஆட் கடத்தலுடன் நைஜீரிய அரசுக்கு தொடர்புள்ளதென்பதை பூரணமாக மறுத்துள்ளார். இது ஒரு தனிப்பட்ட கடத்தல் நாடகம் என்று அவர் தெரிவித்தார்.

நைஜீரிய அரசாங்கமும் இக்கடத்தல் தொடர்பாக தன் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருப்பதை ஆட்சேபித்துள்ளது. அத்துடன் தனது விமானம் தடுத்துவைக்கப்பட்டிருப்பதையும் கண்டித்தே 'பிரிட்டிஷ் கலிடோனியன்' என்ற பிரிட்டிஷ் விமானத்தையும் லேகோஸில் அது தடுத்து வைத்தது.

தற்போது லண்டனில் நைஜீரிய விமானத்தின் மீதான தடை நீக்கப்பட்டதையடுத்து லேகோஸிலும் அந்த பிரிட்டிஷ் விமானம் மீதான தடை அகற்றப்பட்டு அது பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டுள்ளது (கி)

ஆஸ்திரியாவில்

## ஆப்கான், இந்திய பயங்கரவாதிகள் கைது!

வியன்னா, ஜூலை 8

ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னாவில் ஆப்கானிஸ்தானியர்கள், இந்தியர்கள் அடங்கிய ஒன்பது பேர் கொண்ட பயங்கரவாதக் கோஷ்டியொன்று சிக்கியுள்ளது.

இவர்களை ஆஸ்திரிய பாதுகாப்புப் படைகள் மடக்கிப் பிடித்தன. வியன்னா நகரில் இலக்கொன்றைத் தாக்குவதற்கு இவர்கள் திட்டமிட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த ஒன்பது பேரிடமிருந்தும் பயங்கர ஆயுதங்கள்' மற்றும் வெடிமருந்துகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டன. இவர்கள் மீதான விசாரணை தொடருகின்றது.

இவர்களுடன் உரையாடுவதில் இருக்கும் மொழிப் பிரச்னை காரணமாக இவர்கள் மேற்கொள்ளவிருந்த தாக்குதலின் நோக்கம். மற்றும் இவர்களின் நடவடிக்கைகள் என்பன குறித்து உடனடியாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (கி)

### பத்திரிகையாளர் சந்திரமண்டலம் செல்வர்

லண்டன், ஜூலை, 8.

கல்விமான்களையும் பத்திரிகையாளர்களையும் அடக்கிய 100பேர்கொண்ட குழுவொன்றை அடுத்த வருடம் சந்திரமண்டலத்துக்கு அனுப்ப அமெரிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

இக்குழுவில் பல்வேறு நாடுகளில் இருந்தும் பலர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதற்கான பணியினை விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான ''நாசா'' ஏற்கனவே ஆரம்பித்துள்ளது.

இப்பயணம் அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் நடைபெறும். (கெ)

## உலகின் மிகப்பெரிய தொலை நோக்கி கருவி!

புதுடில்லி, ஜூலை 8

உலகிலேயே மிகப்பெரிதான தொலைநோக்குக் கருவி இந்தியாவின் 'பூனே' நகரில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதன் செயற்பாட்டினை மகராஷ்டிரா முதலமைச்சர் நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

இந்திய விஞ்ஞானிகளின் ஐந்து வருடகால முயற்சியின் பின்னர் இப்பெரும் தொலைநோக்கும் கருவிதயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்கருவி 75 மீட்டர்கள் நீளமும், எட்டு மீட்டர்கள் அகலமும் கொண்டதாகும். வானியல் ஆராய்ச்சிகளுக்கும் விண்வெளி ஆய்வுகளுக்குமென இக்கருவி பயன்படுத்தப்படுமென்று அறிவிக்கப்பட்டது. (கி)

## "வடக்கு, கிழக்குப் பகுதிகளை புறக்கணிக்க முடியாது"

### சபையில் 'லக்ஷ்மன்' உரை

(கொழும்பு)

''வடக்கு, கிழக்கு மாகாணங்களை புறக்கணித்து, ஒதுக்கி விடமுடியாது. அரசியல் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் இம்மாகாணங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்த மாகாணங்களின் தேவைகளை நாம் தட்டிக் கழிக்க முடியாது''.

இவ்வாறு அத்தனகல எம். பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி பிரதேச அபிவிருத்தி அமைச்சின் குறைநிரப்பு பிரேரணை மீது பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையில் கூறினார்.

(7ம் பக்கம் பார்க்க)

ஹோம் பிறைன்ஸ் லிமிட்.
பூகொடை ஆலைத்துணிகள்
யாழ். புடவை வியாபாரிகட்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்
எம்மிடம் பணம் நிலையாக
வைப்புச் செய்த வியாபாரிகட்கு அவர்கட்குரிய
30% வருடவட்டி வழங்குவதுடன்
புடவை வகைகளும் கடன் வசதியுடன்
வியாபாரத்திற்கு வழங்கப்படும் என்பதை
மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்
NATIONAL DELUXE
மின் விசிறிகள்
கடன் வசதியுடன் உண்டு
விபரங்கட்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
ஹோம் பிறைன்ஸ் லிமிட்டெட்
82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24310

## யாழ். பிரதான வீதிக்கு 'ரியூப் லைட்'

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கு ரியூப் வெளிச்சம் போடும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள 'மேர்க்குறி லைட்டுக்களுகுப்பதிலாக 'ரியூப் லைட்' போடப்படவிருக்கிறது. (க]

## நீதியரசர் அல்விஸ் விசாரணை அறிக்கை

(கொழும்பு)

நீதியரசர் கே.ஸி.டி. அல்விஸ் தொடர்பாக விசாரணை செய்த பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கையை நீதியமைச்சர் கலாநிதி. நிஸங்க விஜேரத்ன நேற்று முன்தினம் பராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இவ்வறிக்கைமீது விவாதம் நடத்த வேண்டுமென்று தெரிவுக்குழு உறுப்பினர்களில் ஒருவரான கம்பஹா எம் பி திரு. எஸ்.டி பண்டாரநாயக்கா கோரிக்கை விடுத்தார்

சபாநாயகர் இதற்கு அனுமதி வழங்கவில்லை. (இ வெ)

நெஷனல் ரெலிவிஷன்
ரெலிவிஷன்களில் ஈடு இணை அற்று
முன்னணியில் நிலைத்து நிற்பது.
மின்னியக்கப் பொறி வன்மையின்
புதுப்புது அம்சங்கள்
புகுத்தப்பெற்று நித்தமும் புதுப்பொலிவுடன்
திகழ்வது!
யாழ்நகரில்
நெஷனல் ரெலிவிஷன்
★ விற்பனையிலும்
★ பராமரிப்பிலும்
★ பழுது பார்ப்பதிலும்
நாணயம் மிக்க, நயமான, திறமான, தரமான
தேவையை வழங்குவதில்
முன்னணியில் நிலைத்து நிற்பவர்கள்
வீ. கே. ஆர்.
நெஷனல் வழங்கும் அதி புதிய
சகல மொடல் ரெலிவிஷன்களும்
பராமரிப்புச் சேவையுடன் கூடிய
இரண்டு வருட உத்தரவாதத்துடன் எம்மிடம்
விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன.
வீ. கே. இராசரத்தினம்
95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
ரெலிபோன்: 23447

**மணிவாக்கு**

உயர்வைத் தடுகிறவனுக்கு உயர்வு வருவதில்லை. உயர்வுக்குத் தகுதியுடையவன் ஆகின்றவனுக்கு உயர்வு தானேவருகிறது. காய்ச்சியபாலில் ஆடை தானே மேலெழுகிறது.

—அருள்விருந்து

# நமதுநோக்கு

## ஒற்றுமை பல விதம்; ஒன்று அவசியம்

**கா**லத்தை பொருட்படுத்தாது இயற்கை தன் கடனாற்றுகிறது. கரையிலுள்ள கல்லைத் தேய்ப்பதற்குக் கடல் பதினாயிரம் ஆண்டு எடுத்துக்கொள்ளலாம். எத்தனைகாலம் என்று ஏங்கியிருப்பது இயற்கையினிடத்தில்லை. மனிதன் மட்டும் தனது அற்பகாரியம் அதிவிரைவில்குறையவேண்டுமென்று ஆத்திரப்படுவது எதற்காக?

மனம் கொந்தளிப்படைந்திருக்கும் நிலையில் எதுவும் தெளிவாகத் தெரியவராது. பொருள்களின் தாரதம்மியம் மனம் அமைதியடைந்த நிலையிலேயே விளங்குகிறது. ஜனாதிபதி இந்திராவுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் தெளிவற்ற யோசனை காண்பது புதினமல்ல.

பயங்கரவாதம் என்ற பதத்துக்குஇதுவரையும்என்னென்ன வியாக்கியானங்கள் கொடுக்கப்பட்டுவந்திருக்கின்றன? இதுவே தெளிவற்ற மனத்தின் திருகுதாளங்களென்பதற்கு நல்ல எடுத்துக்காட்டு.

பயங்கரவாதம் என்றொரு பொருளுண்டானால், அது தமிழ், சிங்களம், முஸ்லிம் என்று பாகுபடுத்துவது தவறு என்று நாம் அடிக்கடி எழுதிவந்தோம்.

இன்று நாட்டின் ஜனாதிபதி அவர்களே இந்தக் கருத்தை ஒப்புக்கொண்டிருப்பது அவருடைய மனத்தெளிவின் பிரதிபலிப்பு மட்டுமல்ல; தொல்லைகளை இனங்கண்டு அவற்றைத் தீர்க்கும் சாத்தியத்தையும் குறிக்கிறது.

ஜனாதிபதி அவர்கள் நொடிக்கொரு கதை சொல்கின்றாரென்று பலர் கருத்துத்தெரிவிக்கின்றனர்; பிரபல பத்திரிகைகள், வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் தங்கள் குறிப்பில் இதனை ஒரு குறைபாடாகவும் கொள்கின்றன.

தங்கள் கருத்துக்களை ஒரு நாளும் மாற்றிக்கொள்ளாதவர் இருவர். அதில் ஒருவர் மூடர், அடுத்தவர் இறந்தவர். இதொரு மணிவாக்கு. இதனை நினைவு கூர்வது இன்றைய நிலையில் அவசியம்.

பயங்கரவாதத்திற்கும் தமிழர் பிரச்னைக்கும் தொடர்பிருக்கலாம்; ஆனால் பயங்கரவாதமென்னும் பேரியக்கம் இங்குள்ள இன வேறுபாடுகளாலோ, குரோதத்தினாலோ உருவாக்கப்படவில்லை என்பது இன்று ஜனாதிபதி கொண்டிருக்கும் முடிவு

ஆட்சியைக் கவிழ்க்கத் திட்டமிடுபவர் எந்தக் குரோத நிலைமையையும் ஆட்சியின் பலவீனத்தையும் பயன்படுத்துவாரென்பது இயற்கை. அதற்காக நாட்டின் நலத்தை நெடுங்காலமாக வதைத்து வருவதும், தமிழ் மக்களின் எதிர்காலத்தைப் பாதிப்பதுமான இன்றைய நெருக்கடி தொடர்வது நியாயமில்லை.

'உலகெலாம் தேடியுங் காணேன்' என்று தெய்வத்தைக் குறித்து ஒரு தொண்டர் பாடுகிறார்; அதேபோல அகில உலகும் பயணஞ்செய்த ஜனாதிபதி 'பயங்கரவாதம் ஒருசர்வதேச இயக்கமென்பதைக் கண்டதுபோல் இலங்கைத் தமிழர் பிரச்னைக்குத் தீர்வு கண்டிருக்கமாட்டார். அது இந்நாட்டின் சொந்தப் பிரச்னையென்பதையே கண்டிருக்கிறார்; குறிப்பாக இதனை வற்புறுத்தியவர் இந்தியப் பிரதமர் இந்திராவென்பது பல தப்பபிப்பிராயங்களை நீக்கிவிடும்.

இந்தியா எங்களை ஆக்கிரமிக்கப்போகிறதென்று ஆத்திரப்பட்டு 'சிங்கள மக்களே ஒற்றுமைப்படுங்கள்'- இது ஒருவித ஒற்றுமை.

'தமிழ்ப்புலிகள் உங்களை ஆத்திரமடையச் சில தீங்குகளில் ஈடுபடுவார்கள். நீங்கள் ஒற்றுமைப்பட்டு, அதற்கு இடம் கொடுக்காமல் பொறுமையுடனிருங்கள்' – இது இன்னொருவித ஒற்றுமை.

'தமிழ்நாடு இலங்கைத் தமிழருக்குத் தெரிவிக்கும் அனுதாபமும் ஆதரவும் பெரும் பாராட்டுக்குரியது; ஆனால் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் தங்களுக்குள் மோதிக்கொள்ளாமல் ஒற்றுமைப்பட்டு நல்கும் உதவி பலனளிக்கும்; எனவே எல்லோரும் ஒற்றுமைப்படுங்கள்' - இது இன்னுமொரு விதம்.

நியூயோர்க்கில் கூடிய உலகத் தமிழ் மாநாடு, இலங்கைத்தமிழர் கட்சிகள், தலைவர்கள் அனைவரும் ஒற்றுமைப்பட்டு தங்கள் பிறப்புரிமைகளை வென்றெடுக்க வேண்டுமென அறைகூவி இருக்கிறது - இதுவும் இன்னொன்று.

இன்னும் பல வழிகளில் இங்கு வாழும் தமிழ்மக்கள் மட்டுமல்ல எல்லா இனத்தவரும் தனித்தும், ஒன்றுபட்டும் ஒற்றுமைப்பட வேண்டுமென்ற குரல்கள் எழுந்துகொண்டேயிருக்கின்றன.

இவற்றுள் முதன்மையானதும், மிக முக்கியமாக நாம் கருதுவதும் ஜனாதிபதி ஜெயவர்த்தன இன்று எழுப்பும் ஒற்றுமைக் குரல்.

''தமிழ் மக்களின் விடுதலை'' என்றொரு இயக்கம் உண்டு. தலைவர்கள் மட்டுமல்ல ஒரு தலைமுறைத் தமிழ் இளைஞர்கள் இதற்காகத் தங்கள் வாழும் வளரும் வருங்காலத்தை இழந்துநிற்கின்றனர். இவர்களின்தியாகம் பயங்கரவாதத்திலிருந்து வேறுபடுத்தப்பட முடியுமானால் தமிழர் பிரச்னைக்கு முடிவுகாண முடியும்.

நாட்டைக்கெடுத்துவரும் அளவுகடந்த அக்கிரமங்கள் ஒழிய இத்தேசியப் பிரச்னைக்கு முதலிடம் அவசியம்.

# "வெலிக்கடைச்சிறை படுகொலைகள்: சர்வதேச விசாரணை வேண்டும்"

## மனித உரிமைகள் கருத்தரங்கில் கோரிக்கை

(அரியாலை)

''மகாத்மா காந்தியுகத்தில் நாம் இன்று இருப்பது பெரும் பாக்கியமாகும். எமது காலத்தில் மூன்று சமூகப் புரட்சிகள் நடைபெற்றன. முதலாவது, மகாத்மா காந்தியின் அகிம்சை அடிப்படையில் ஆசியா ஆபிரிக்காவில் நூறு கோடி மக்கள் இரத்தப் பலியில்லாமல் சுதந்திரம் பெற்றார்கள். இரண்டாவது ''ஏழை **என்றும் அடிமை என்றும்** எவனும்இல்லை ஜாதியில்இழிவு கொண்ட மனிதரென்பது இந்தியாவில் இல்லையே என்ற அடிப்படைக் கொள்கை இந்தியாவில் மாத்திரமல்ல, அமெரிக்காவிலும், உலகம் முழுவதிலும் கைக்கொள்ளப்படுகிறது மூன்றாவது உலகம் ஒரு சமூகத்தை நோக்கிச் செல்லும் பிரயாணத்தை தொடங்குவதை காணுதல் என்பதாகும்.

இவ்வாறு யாழ். பரியோவான் கல்லூரி உவில்லியம் மண்டபத்தில் பரி. யோவான் கல்லூரி இன்ரறக் கழகத்தின் ஆதரவில்நடைபெற்ற''மனித உரிமைகள்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் முன்னாள் சிரேஷ்ட கல்வித்துறை விரிவுரையாளர் திரு கு. நேசையா 'மனித உரிமைகளில் சுதந்திரமும் சமத்துவமும்'' என்ற தலைப்பில் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்.இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு என்.சபாரத்தினம் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் திரு கு. நேசையா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: ''மகாத்மா காந்தி இறந்த 1948ம் ஆண்டு மனித உரிமை சாசனம் ஐக்கிய நாட்டுச் சபையினால் பிரகடனப் படுத்தப்பட்டது. எமது நாடும் இந்தச் சாசனத்தை ஏற்றுக்கொண்டு இதில் கையொப்பமிட்டது.

''1966ம் ஆண்டில் வியட்நாம் மகாநாட்டிலும் இக்கொள்கை முற்றும் முழுவதுமாக எற்றுக்கொள்ளப்பட்டது. குறைபாடுள்ள மக்களுக்கு கல்வி வேலை என்பவற்றில் சம சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்று யூ. எல்.ஓவின் 1955ம் ஆண்டின் சட்டம் 99 வது ஷரத்து வலியுறுத்துகிறது. இதனை எமது நாடும் ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த மனித உரிமைச் சாசனத்தின் ஷரத்துக்கள் இந்தியா, இலங்கை, போன்ற நாடுகளிலுள்ள அரசியல் சட்டங்களில் இடம்பெற்றுள்ளன. இந்தியா சுதந்திரம் பெற்ற பொழுது அமைக்கப்பட்ட அரசியல் சாசன அமைப்புக் குழுவில் சகல இன மதப்பிரிவினருக்கும் இடமளிக்கம்பட்டது. அரசியல் சாசனத்தில் ஒரு மதத்துக்கும் முக்கிய இடமளிக்கக் கூடாது என்று இந்திய நாட்டின் அரசியல் வாதியான இராதாகிருஷ்ணன் கூறினார். இந்தியாவின் அரசியல் அமைப்புக் குழுவினால், மொழி, தேசியக் கொடி, மத பேதபின்மை சமஷ்டி அமைப்பு என்பன ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டவையாகும்.

நாட்டில் வாழும் சகல இன மத மொழி பேசும் மக்களுக்கு சமநிலை ஏற்படுத்தக் கூடியதாகவே அந்த நாட்டின் அரசியல் சாசனம் அமைக்கப்பட வேண்டும். பாடசாலை சமூக அமைப்பாக மாறவேண்டும். மரணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி, சர்வகலாசாலை கல்வி, தொழிற்சங்கம், கூட்டுறவு என்பன மக்கள் அமைப்பாகவே அமைய வேண்டும். இவைகளில் எந்த வகையிலும் அரசியல் தலையீடு இருக்கக் கூடாது.

''தனியாளுரிமை அல்லது சுய உரிமைகளுடன் மட்டும் நின்று விடுவது மனித உரிமைகளுக்கு ஒரு வலுவான அத்திவாரமாகாது. 16-21 வரையிலான ஷரத்துக்கள் காலத்தால் மதிப்புப் பெற்ற சமுதாயத்தின் அணுவாகிய குடும்பத்துடன் ஆரம்பிக்கின்றன. இவற்றின் ஒரு முக்கிய அங்கம் அக நிலைச் சுதந்திரமாகும். 18ஆம் ஷரத்து எண்ணச் சுதந்திரம், உளச் சான்றுச் சுதந்திரம், மதச் சுதந்திரம் ஆகியவற்றை அகநிலைச்சுதந்திரங்களெனக் குறிப்பிடுகின்றது. மதச் சுதந்திரம் 19வது ஷரத்தில் கூறப்பட்டுள்ள எண்ணச் சுதந்திரத்துடனும் 20 ஆம் ஷரத்தில் கூறப்பட்டுள்ள குடியுரிமைச் சுதந்திரம், கூட்டமாகக் கூடும் சுதந்திரம் ஆகியவற்றுடனும் தொடர்புடையதாகும்.

இச்சுதந்திரங்கள் யாவற்றிற்கும் உரைகல்லான எண்ணச் சுதந்திரமும், தகவல் பெறும் சுதந்திரமும் 19ஆவது ஷரத்தில் விபரமாகக் கூறப்பட்டுள்ளன. அச்சரத்தில் ஒவ்வொருவருக்கும் அபிப்பிராய சுதந்திரமும், அதனை எடுத்துக் கூறும் சுதந்திரமும் உண்டு. இச்சுதந்திரத்தில் தலையீடின்றி அபிப்பிராயங்களை மேற்கொள்ளும் உரிமையையும், தகவல்களையும், வாய்மூலமாக அல்லது எழுத்து மூலமாக மாத்திரமல்ல, அச்சு மூலமாகவும், வானொலி, கலை, திரைப்படம் ஆகியவற்றைப் பயன் படுத்தி சகல நாடுகளுக்கும் பரிமாற்றம் செய்யக் கூடியதாகவுள்ளது. எனக் கூறப்பட்டுள்ளது. கருத்து எங்கும் உற்பத்தியாகினும் அவற்றை ஒரு சில மணித்தியாலங்களில் மன்பதையின் பொதுச் சொத்தாகக் கூடியதாகவுள்ளது. மனித பலவீனங்கள் காரணமாகவும் புதிதாகச் சுதந்திரம் பெற்ற நாடுகளில்

''ஐக்கிய நாட்டுச் சாசனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமை சாசனத்தை ஏற்றுக்கொண்ட எமது நாடு, பின்வரும் குறைபாடுகளை நீக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள முன்வரவேண்டும். வெலிக்

(5ம் பக்கம் பார்க்க)

# வவனியா - முல்லைத்தீவில்

## ஜேர்மன் நிறுவனத்தின் பணிகள்!

வவனியா - முல்லைத்தீவு மாவட்டங்களில் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் இப்பகுதி மக்களுக்கு அரிய பல சுகாதார சேவைகளை செய்து வருகிறது.

வவனியாவில் 315 குழாய்க் கிணற்றையும் 1000 குழி மலகூடங்களையும் குறித்த நிறுவனம் அமைத்துக் கொடுத்துள்ளது.

வவனியா - முல்லைத்தீவு மாவட்டங்களில் 60 வீதமானவர்கள் குடல் நோயினால் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர் என்பது சுகாதார இலாகாவின் புள்ளிவிபரத்திலிருந்து தெரியவந்துள்ளது. ஏனவே அப்பகுதிகளில் குடல் நோய்களைக் கட்டுப்படுத்த ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் நல்ல சேவைகளை செய்து வருகின்றது.

குழாய்க் கிணறுகளிலிருந்து பெறும் நீரையே மக்கள் பருக வேண்டும். அத்துடன் மல கூடங்களில் மட்டுமே மலம் கழிப்பதை வற்புறுத்தி கருத்தரங்குகளையும் விளக்க பயிற்சி வகுப்புக்களை இவர்கள் நடாத்தி வருகின்றனர்.

அத்துடன் அமைக்கப்பட்ட குழாய்க் கிணறுகளை பேணி பராமரிப்பதற்குக்கூட பராமரிப்பாளர்களையும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆலோசனையின்படி வவனியா உள்ளூராட்சி ஆணையாளர் நியமித்துள்ளார்.

இவர்களுக்கென பயிற்சி வகுப்புக்களையும் இந்த நிறுவனம் ாலத்துக்குக் காலம் நடாத்தி வருகின்றது.

வவனியா மாவட்டத்திலுள்ள குழாய்க் கிணறுகளை பழுதுபார்ப்பதற்கென நான்கு திருத்துனர்கள் கடமையாற்றுகின்றனர்.

வவனியா - முல்லைத்தீவு மாவட்ட உதவி திட்ட முகாமையாளராக ஜேர்மன் நாட்டு பிரஜையான திரு.ஜோகானஸ் கினப் பணி புரிகின்றார்.

இத்திட்டத்தில் மூன்று ஜேர்மன்நாட்டு பிரஜைகள் கடமையாற்றுகின்றனர். சுகாதார விடயங்களுக்கு இணைப்பாளராக திரு. அரி-ஜெயரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார். இவரே சுகாதார விடயங்களை முன்னின்று கவனித்து திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றார்.

மேலும் 50க்கு மேற்பட்ட வெளிக்களத் தொழிலாளர்களும் இத்திட்டத்தில் பணிபுரிகின்றனர்.

வவனியா - முல்லைத்தீவு திட்ட அலுவலகம் வவனியா மன்னார் வீதி குருமன்காடு என்றஇடத்தில் அமைந்துள்ளது. ஜேர்மன் நாட்டு அரசின் உதவியுடன் இத்திட்டம் வவனியா-முல்லைத்தீவில் மேற்கொள்ளப்படுகின்றது. இலங்கை அரசாங்கம் திட்டத்துக்கு முழு ஆதரவையும் அளித்துள்ளது. குறித்த நிறுவனம் வவனியாவில் மேலும் ஓர் திட்டத்தினையும் மேற்கொண்டுள்ளது.

அதாவது வவனியா நகருக்கு குழாய் மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் இத்திட்டமே ஆகும்.

10 இலட்சம் ரூபாய் செலவில் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. திட்டத்தின் முக்கால் பங்கு வேலைகள் முடிவடைந்துள்ளது.

5 பாரிய கிணறுகள் நீரை பெறுவதற்கு தோண்டப்பட்டுள்ளது.ஒன்றரை இலட்சம் கலன் கொள்வனவு செய்யக் கூடிய தாங்கி ஒன்றும் வவனியா புதிய பஸ் நிலையத்துக்கு அருகாமையில் நிறுவப்பட்டு வருகின்றது இத்தாங்கியிலிருந்தே நீர் விநியோகம் செய்யப்படவுள்ளது. தற்போது குழாய் பதிக்கும் அகழ்வு வேலைகள் நடைபெற்று வருகின்றது. பெரும்பாலும் திட்டம் இன்னும் இருமாதங்களில் முடிவடையுமென நம்பப்படுகின்றது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் வவனியாவிலும் முல்லைத்தீவிலும் செய்யும் சேவைக்கு இப்பகுதி மக்கள் நன்றியுடையவர்கள் ஆவார்கள் என்றே குறிப்பிடவேண்டும். இவர்களது சேவை இன்னும் தொடரவேண்டும்— பணியும் வளரவேண்டும்.

**செய்திக் கடிதம்:** ரி. விவேகராசா
வவனியா நிருபர்

# சுவீப்முடிவுகள்

(கொழும்பு)
970-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

**முதலாவது பரிசு:**
**07 V 0231**
ரூ. 1, 93,000

**இரண்டாம் பரிசு:**
**13 V 0073**
ரூ. 72, 375

**மூன்ருவது பரிசு:**
**18 V 0830**
ரூ. 24,125

ரூ.868—50 சதம் கொண்ட 100 ஆறுதல் பரிசுகள் வருமாறு:

05 A 0908
13 A 0677
06 B 0648
17 B 0905
05 C 0034
11 D 0584
18 D 0575
07 E 0528
21 E 0232
20 F 0380
02 G 0048
14 H 0559
11 J 0685
12 J 0504
15 J 0433
15 J 0754
06 K 0028
22 K 0235
10 A 0478
03 B 0870
09 B 0351
18 B 0295
06 C 0587
16 D 0134
06 E 0692
10 E 0282
14 F 0159
01 G 0100
18 G 0249
20 H 0814
12 J 0227
15 J 0433
15 J 0460
18 J 0021
18 K 0113
03 L 0988
05 L 0344
08 L 0796
02 M 0709
17 M 0206
03 N 0824
10 N 0001
21 N 0061
05 O 0994
12 O 0903
02 P 0540
04 Q 0574
18 Q 0055
02 R 0392
17 R 0811
12 S 0816
14 S 0245
16 S 0590
18 T 0913
11 U 0993
04 V 0421
13 V 0917
03 W 0753
14 W 0033
01 X 0331
08 X 0752
18 X 0257
08 Y 0390
11 Y 0978
16 Y 0209
02 Z 0902
07 Z 0156
13 Z 0780
05 L 0338
11 L 0702
04 M 0778
0[illegible] N 0626
06 N 0439
15 N 0235
05 O 0542
12 O 0590
18 O 0301
05 P 0559
05 Q 0593
01 R 0821
14 R 0064
09 S 0408
13 S 0415
14 S 0421
18 S 0410
05 U 0338
03 V 0604
05 V 0105
18 V 0950
11 W 0194
22 W 0989
05 X 0781
12 X 0452
05 Y 0067
10 Y 0918
14 Y 0602
22 Y 0270
04 Z 0899
11 Z 0942
16 Z 0809
20 Z 0106

(இவை யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

# "தமிழை வளர்ப்பதில் மாணவர் அதிக அக்கறை காட்டவேண்டும்"

[யாழ்ப்பாணம்]

"தமிழ்த்தினப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காகக் காட்டிய ஆர்வத்தைத் தமிழ்த்தினம் முடிந்தவுடன் விட்டுவிடாமல் தொடர்ந்து காட்டுவதன் மூலமே நாம் தமிழுக்கு உரிய இடத்தைக் கொடுத்து அதை உயர்த்த முடியும்"

இவ்வாறு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்ற தமிழ்த்தின விழாவுக்குத் தலைமைவகித்த யாழ்.வட்டாரக் கல்வி அதிகாரி திரு.இ. சிவானந்தன் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. வே. பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. சிவானந்தன் மேலும் பேசுகையில் யாழ். மத்திய கல்லூரி போன்ற பெரிய கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் தமிழை வளர்ப்பதில் அக்கறை காட்ட வேண்டுமென்றும் அதற்கு ஆசிரியர்கள் வழிகாட்ட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

திரு வ. உமாபதிசிவம், திரு. நா. இராசரத்தினம், திரு. த. கனகலிங்கம், திருமதி ஏ. எம். மூர்த்தி ஆகியோரும் பேசினர்.

# 1 லட்சம் போத்தல் கள் தேங்கிக் கிடக்கிறது!

## வட்டு. தெ. ப. கூ. ச. பெரு நஷ்டம்

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் சங்கானையில் இயங்கிவரும் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட சுமார் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் போத்தல் கள் விற்பனை செய்யப்படாது தேங்கிக்கிடப்பதால் சங்கத்திற்கு பலத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

சங்க உறுப்பினர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட கள்ளுக்கான கொடுப்பனவுகள் யாவும் வழங்கப்பட்டு விட்டதாகவும், வெளிமாவட்டங்களுக்கு போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளை விநியோகிப்பதில் தேக்க நிலை ஏற்பட்டிருப்பதாகவும், இதன் காரணமாக சங்கம் நஷ்டமடைந்து வருவதாகவும் சங்கத் தலைவரும், முன்னுள் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினருமான திரு. சு. நடேசு தெரிவித்தார்.

இதே வேளை அண்மையில் சங்கானையில் உற்பத்தி செய்யப்பட்ட 45 ஆயிரம் போத்தல் கள் திக்கம் சாராய வடிசாலைக்கும் விநியோகிக்கப்பட்டிருப்பதாகவும் திரு. நடேசு தெரிவித்தார்.

# வெலிக்கடைச்சிறை...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கடைச் சிறைச்சாலையில் கைதிகள்கொல்லப்பட்டதுபற்றி சர்வதேசவிசாரணை மேற்கொள்ளப்படவேண்டும்.

"1972,1978-ம் ஆண்டுகளில் அமைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் சாசனம் அரசியல் கட்சி ரீதியில் அமைக்கப்பட்டதாகும். இதனை நீக்கிவிட்டு சகல இன மக்களும் கொண்ட அரசியல் ஆணைக்குழுவொன்றை நியமித்து அரசியல் சாசனமொன்றை ஆக்க முன்வரவேண்டும். மக்களின் வாக்குரிமையால் அரசாங்கம் தெரிவுசெய்யப்படாமல் 1983ம் ஆண்டு டிசம்பர் மாதம் அரசு நடாத்திய சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் அரசை நிறுவியதுடன், 21-வது ஷரத்துக்கு மாருக 14 தமிழ் எம். பிக்களையும் பதவி துறக்கப்பண்ணியுள்ளது மிகவும் பாதகமான செயலாகும்.

19 வது ஷரத்துக்கு மாருக ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் வெளிவரும் தினசரிப் பத்திரிகைகளில் அரசாங்கம் 75 வீதம் ஆதிக்கம் செலுத்திவருவதுடன் அரசாங்க சார்பான செய்திகளையே வெளியிடுகின்றன.

"இன்று நாட்டிலிருக்கும் கூட்டுறவு முறைமக்கள் இயக்கமாக அமையாது அரசியல் தலையீடே முழுவதுமாக இருக்கிறது.

"சர்வகலாசாலைக் கல்வி, மாணவர்களுக்குரிய கல்வி என்பவற்றில் அரசியல் தலையீடு பெருமளவில் இருந்து வருகிறது இதனை நீக்க முன்வரவேண்டும்.

சமூகப் பாதுகாப்பில் வயது சென்றவர்களுக்கும்கஷ்டப்படுகிறவர்களுக்கும் அரசாங்க உதவி மிகக்குறைவாகவுள்ளது.

"மனித உரிமைச்சாசனத்தை நாம் முழுவதுமாக அனுபவிக்க வேண்டுமானல் சுயராச்சியம் மற்றவர்கள் எமக்குத்தருவதில்லை. மனித உரிமைகள் என்ற உணர்ச்சியில் எம்மை நாம் பார்த்துக் கொள்வதுடன் எமது சுதந்திரத்தை நாம் பெறவேண்டும்'' என்ருர்.

கருத்தரங்கிற்குத் தலைமை வகித்த யாழ். இந்துக்கல்லூரி முன்னுள் அதிபர் திரு. என். சபாரத்தினம் தமது தலைமையுரையில் "மனித உரிமைகள் சாசனத்தில் 29 ஷரத்துக்கள் மனிதனின் உரிமைகளை வற்புறுத்தினலும் அவற்றில் உயிர் வாழும் உரிமை, செம்மையாக வாழும் உரிமை, தன்னை மனிதனுக்கின்ற உரிமை, எல்லோரும் இன்பமாக வாழுகின்ற உரிமை ஆகிய நான்கும் இவற்றுள் மிகவும் முக்கியமானவையாகும். மனித உரிமைகள் சமீப காலமாக எல்லோராலும் பேசப்படுகின்ற பெரியவிடயமாகும் பல இன மக்கள், பல மொழி பேசும் மக்கள், பலநிறமக்கள் வாழுகின்ற நாடுகளில் அவர்கள் பலவித இன்னல்கள் மத்தியில் வாழ்கிருர்கள். இந்தக் கஷ்டங்களை நீக்கவும், அவர்களைச் சுதந்திரமாக வாழச் செய்யவுமே, மனித உரிமைகள் சாசனம் அவசியமாகிறது'' என்று கூறினுர்.

பரி. யோவான் கல்லூரி இன்ரறக்கழகத் தலைவர் செல்வன் என். இராசநாயகத்தின் ஆரம்ப உரையுடன் ஆரம்பமாகிய இக்கருத்தரங்கில்சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர்திருமதிஎம் பரராஜசிங்கம், சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம், யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை முன்னுள் தலைவர் திரு. எஸ். நடராசா, யாழ். மாநகர சபை முன்னுள் முதல்வர் திரு. இராசா விசுவநாதன், யாழ்.மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வி.கே. சிவஞானம் உட்பட பலர் உரையாற்றினர்.

கருத்தரங்கில் மாணவர்கள் கேட்ட கேள்விகளுக்கும் பதிலளிக்கப்பட்டது.

# ஆலயம் புனருத்தாரணம்

[illegible](வவனியா)

வவனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி[illegible] விநாயகர் ஆலய புனருத்தாரணத் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

ஆலய திருப்பணி வேலைகள் சகல ஆயத்தங்களும் செய்யப்பட்டு மீண்டும் புணருத்தாரண அலங்கார வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என மேற்படி ஆலய பரிபாலன சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

# ரூபவாஹினியில் இன்று

மாலை
5-30 நாட்டுவளம்
5-35 வூடிவூட் பெக்கர்
6-00 விளையாட்டுப் பயிற்சி
6-20 சிறுவர் நிகழ்ச்சி
6-35 சஞ்சிகை நிகழ்ச்சி
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 கலை அரங்கம் புதியசுவர்கள் பாகம் 2
7-45 சிங்கள நிகழ்ச்சி
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 எதிர்கால நிகழ்ச்சிகள்
8-55 யெஸ் மினிஸ்ட்டர் நகைச்சுவை தொடர் சித்திரம் (ஆங்கிலம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 சர்வதேச உதைப்பந்தாட்டம்
10-30 உலகச் செய்திகள்
10-35 உதைப்பந்தாட்ட தொடர்ச்சி

# நயினுதீவில் முதலுதவி முகாம்

[யாழ்ப்பாணம்]

நயினுதீவு உற்சவ காலங்களில்' ஆலய மேற்கு வீதியில் அமைந்துள்ள தற்காலிகமுகாமில் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் பிரிவைச் சேர்ந்த தொண்டர்கள் கடமையாற்றுவார்கள்.

இம்முகாமுக்கு பொறுப்பாக சென் ஜோன்ஸ் முதலுதவிப் படை அத்தியட்சகர் செ.செல்வரஞ்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இரவு பகல் சேவையை இத்தொண்டர் பிரிவு ஆலய சுற்ருடலில் மேற்கொள்ளும். மாகாண ஆணையாளர்டாக்டர் ஈ.பி இராசையா, பிரதேச ஆணையாளர் ஆகியோர் தேர் உற்சவ தினமான எதிர் வரும் 11ம்திகதி இப்பிரிவுக்கு விஜயம் செய்வார்கள். (கி)

# யாழ். இந்து ஆரம்ப பாடசாலை வெற்றியீட்டியது

[யாழ்ப்பாணம்]

நல்லூர் வட்டாரப் பாடசாலைகளின் சங்கீத, நடன, நாடகப் போட்டிகளில் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை, ஆரம்ப பிரிவில் மூன்றுநிகழ்ச்சிகளில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

மேற்படி போட்டி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நேற்று முன்தினம் நடந்தது.

போட்டிகளில்கலந்து கொண்டபாடசாலைகள்மூன்றுநிகழ்ச்சிகளில் மட்டுமே பங்குபற்ற அனுமதிக்கப்பட்டன என்பதும், ஆரம்ப பிரிவில் பங்குகொண்ட யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மூன்று நிகழ்ச்சிகளிலும் முதலாம் இடத்தை தட்டிக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.


முடிவு திகதி பின்போடப்பட்டது

இரசிகமணி கனக செந்திநாதன்
நினைவுக் குறுநாவல்
போட்டி

★ 1-ம் பரிசு ரூபா 500-00
★ 2-ம் பரிசு ரூபா 300-00

★ அமரர் இரசிகமணி கனக செந்திநாதன் அவர்களின் நினைவாக யாழ். இலக்கிய வட்டமும் 'ஈழநாடு'ம் இணைந்து நடத்தும் இக் குறுநாவல் போட்டியில் எழுத்தாளர்கள் எவரும் கலந்து கொள்ளலாம்.
★ ஆக்கங்கள் தமது சொந்தப் படைப்புக்கள் என உறுதிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.
★ தாளின் ஒருபக்கத்தில் மட்டும் (புல்ஸ்காப்) 30 முதல் 80 பக்கங்களுக்கு மேற்படாதிருக்க வேண்டும்.
★ உறையின் இடது மேல் மூலையில் 'இரசிகமணி கனக செந்திநாதன் நினைவுக் குறுநாவல் போட்டி' எனக் குறிப்பிடவும்.

எழுத்தாளர்கள் தங்கள் குறுநாவலை 15-8-84 திகதிவரை அனுப்பலாம்.

★ அனுப்பவேண்டிய முகவரி :
இரசிகமணி குறுநாவல் போட்டி
ஈழநாடு வாரமலர்,
த. பெ. எண் : 49,
யாழ்ப்பாணம்.



WANTED

TELEPHONE, TELEX AND COMPUTER OPERATER
புதன்கிழமை காலை (11-07-84) 10 — 11 மணிக்கு இடையில்
நேர்முகப்பரீட்சை நடைபெறும்.
விரும்புவோர் சான்றிதழ்களுடன் சமுகமளிக்கவும்.

CROSS TRAVEL SERVICES (Pte) LTD.
STAGE II. 1 st FLOOR, No. 5, MODEL MARKET,
BUS STAND CENTRE ROAD, JAFFNA.
Phone No: 22040, 22065 TELE No: 22207 (C. T. S) CE

# 'கணவனைக் கத்தியால் வெட்டி சங்கிலியையும் அறுத்தார்!'

## தெல்லிப்பழை கொள்ளை வழக்கில் சாட்சியம்

(மாவிட்டபுரம்)

''சம்பவதினம் நானும், கணவரும் தோட்டத்தில் புல் பிடுங்கிக் கொண்டிருந்த சமயம் அங்கு வந்த 1ம் எதிரி எனது கணவனுக்குக் கத்தியால் வெட்டியதுடன் எனது கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியையும் அறுத்தார் இரண்டாம் எதிரி என்னைத் தாக்கினார்.

இவ்வாறு தெல்லிப்பழை தங்கச் சங்கிலி கொள்ளை வழக்கில் சாட்சியமளித்த வழக்காளியான சுந்தரமூர்த்தி பார்வதி கூறினார்.

இவ் வழக்கில் மேற்படி பெண்ணின் தங்கச் சங்கிலியை கொள்ளையடித்ததாக பன்னாலை தெல்லிப்பழையைச் சேர்ந்த சீனியர். திரு பாலசிங்கம், சீனியர் இலட்சுமி, சீனியர் வேலுப்பிள்ளை ஆகியோர் மீது குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது.

இவ்வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக் கெடுக்கப்பட்ட சமயம் வழக்காளியான சுந்தரமூர்த்தி பார்வதி சாட்சியமளித்ததைத் தொடர்ந்து எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்.

சாட்சியத்தில் முரண்பாடுகள் காணப்பட்டதையடுத்து நீதிபதி. திரு சி. வி. விக்னேஸ்வரன் மேற்படி எதிரிகளையும் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கினார்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார், வழக்காழி தரப்பில் காங்கேசன்துறை பொலிஸ் சார்ஜன்ட் திரு. துரைசிங்கத்துடன் சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு ஆஜரானார்.

## இன்றைய பலன்

மாதம்—ஆனி
திகதி—25(09-07-1984)
வாரம்—திங்கள்
திதி—ஏகாதசி முற்பகல் 10-38ன் மேல்துவாதசி
நக்ஷத்திரம்—விசாகம் காலை 7-06ன் மேல் அனுசம்

மேடம்; இன்னலின் பின்னல் உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும் இதயம் வேதனைப்படும் திடசித்தமிருப்பின் எதையும் சமாளிக்கலாம்.

இடபம்: மேடைப் பேச்சாளர்கள் பெரும்புகழ் அடைவர் நாடகக் கலைஞர்களுக்கு நன்மையான தினம் இனபந்துகளின் கொண்டாட்டத் திற்கும் இடமுண்டு.

மிதுனம்: முன்னேற்றப்பாதையில் தடைகள் உருவாகும் எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும் குடும்பத்தில் சிறுபூசல் தோன்றக்கூடும்.

கடகம்: தொழில் துறையில் முன்னேற்றம் காணப்படும் தாய்வழியால் பொருள் வரவிற்கும் இடமுண்டு வாகன நலனுடன் குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிலவும்.

சிங்கம்: உறவுமுறைகள் பலப்படும் உற்சாகம் பெருகும் புதிய நண்பர்கள் புடை சூழ்வார்கள் பணவிவகாரங்கள் மகிழ்ச்சியை அளிக்கும்.

கன்னி: ஏமாற்றத்திற்கு இடமுண்டு எனினும் இருள் சூழ்ந்த வேளையிலும் ஒளிக்கோடுகள் தென்படலாம் அமைதி நன்று.

துலாம்: காதல் உலகில்கனிவான சம்பவங்கள் இடம் பெறும் களஸ்திரவழியால் சுகமுண்டு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

விருச்சிகம்: புதிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு இன்று நலம் வெளியிடத் தொடர்புகளிலும் நல்ல மாறுதல்கள் தென்படுகிறது மாணவர்களாயின் கல்வியில் அதிக ஆர்வம் பிறக்கும்.

தனுசு: உயர்ந்த குணங்கள் உங்களை புகழின் உச்சக்கட்டத்திற்கு அழைத்துச் செல்லும் பிதாவழியால் நற் செய்தியும் கிடைக்கலாம் தெய்வ வழிபாட்டில் ஆர்வம் பிறக்கும்.

மகரம்: வணிகர்களுக்கு வியாபார விருத்திக்கு இடமுண்டு. புதிய முயற்சிகள் இன்று கைகூடும். செலவினங்கள் கைக்கடங்கியதாக இருக்கும்.

கும்பம்: உழைப்பினால் முன்னேற்றம் ஏற்படும் சகோதவழியால் சுகமுண்டு. புத்திரர்களால் புகழும் வந்து சேரும்.

மீனம்: குறுக்குவழித் தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறும் மேலதிகாரிகளுடன் பகைத்துக் கொள்ள வேண்டாம் பொறுமை நன்று.

திருமலை
வே. ரவீந்திரன்

# ஏழைகளுக்காகவே வைத்தியசாலைகள்

(மட்டுவில்)

பணவசதி படைத்தவர்களுக்கு இப்பொழுது நல்ல வைத்திய வசதி கிடைக்கிறது. ஏழைகள்பாடு கஷ்டமாகவே இருக்கிறது. இப்படியான ஏழைகளுக்காகவே வைத்தியசாலைகள், குடும்ப நலச்சேவையாளர்கள் இருக்கிறார்கள். அவர்களை நீங்கள் நல்லபடி பயன்படுத்தவேண்டும்''

இவ்வாறு யாழ் பிராந்திய சுகாதாரச்சேவைப் பணிப்பாளர் டாக்டர் கே. மாணிக்கம் கைதடியில் நடைபெற்ற ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு பற்றிய ஆலோசனைக் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

கைதடி, நாவற்குழி, மறவன்புலோ ஆகிய பகுதிகளுக்கான ஆலோசனைக் கூட்டம் கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கைதடி வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் ஏ. ஜே. நல்லைநாதன் தலைமையில் நடைபெற்றது. டாக்டர் மாணிக்கம் தொடர்ந்து பேசியதாவது:

''நோய்வந்தபின் சிகிச்சையளிப்பதைவிட, வரமுன் காப்பதே உயர்ந்த சுகாதார முறை. உங்கள் சூழலைச் சுகாதாரமாக வைத்துக் கொள்ளுங்கள். அதுவே உங்கள் சுகாதாரப் பாதுகாப்பு''

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. நடராஜா' கைதடி சுகாதாரப்பரிசோதகர் திரு. எஸ். குணரத்தினம், யாழ் மாவட்ட சுகாதாரக் கல்வி அதிகாரி திரு, வைத்தீஸ்வரன் உட்பட பலர் ஆலோசனை வழங்கினர்.

## மட்டு. நகரில் 'வித்தி'க்கு மணி விழா

(மட்டக்களப்பு)

மணி விழா காணும் பேராசிரியர் சு. வித்தியானந்தன் மணி விழா மட்டக்களப்பில் எதிர்வரும் 21ம் திகதி கொண்டாடப்படுகின்றது.

கோட்டமுனை இளைஞர் கழகத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இம் மணி விழாவிற்கு அரசாங்க அதிபர் திரு. எம். அந்தோனிமுத்து தலைமை வகிக்கிறார்.

இதற்கான ஒழுங்குகளை கழக செயலாளர் திரு. த. ஈஸ்வரதாஸ் மேற்கொண்டுவருகிறார்.


# தூளோபல்

## வழங்கும்

## விசேட

# ரெலிபோன் சேவைகள்

### உங்கள் ரெலிபோனில் வெளிநாட்டு அழைப்புக்கள்:

உங்கள் இல்லங்களில் அல்லது காரியாலயங்களில் ரெலிபோன் இணைப்பு உண்டாயின் உங்கட்குத் தேவையான வெளிநாட்டு உள்நாட்டு ரெலிபோன் அழைப்புக்களை எமது ரெலிபோன் ''சுவிச் போட்'' மூலமாகப் பெற்று உங்கள் ரெலிபோனுக்கு இணைப்புச் செய்து தருகிறோம்.

### வெளிநாடுகளிலிருந்தே உங்களுக்கு ரெலிபோன் அழைப்புக்கள்:

இல்லங்களில் அல்லது காரியாலயங்களில் ரெலிபோன் இணைப்பு இல்லாத உங்களுடன் உள்நாட்டிலிருந்தோ அல்லது வெளிநாட்டிலிருந்தோ உங்கள் அன்பிற்குரியவர்கள் யாரேனும் அவசரமாக ரெலிபோனில் தொடர்பு கொள்ள விரும்பினுல் நாங்கள் உங்களுக்கு தகவலனுப்பி வரவழைத்து எங்கள் பணியகத்திலிருந்தே நீங்கள் ரெலிபோன் அழைப்பெடுத்து உங்கள் அன்பிற்குரியவர்களுடன் அளவளாவவோ அல்லது அவர்கள் பிற இடத்திலிருந்தே தாமே எங்கள் பணியகத்திற்கு அழைப்பெடுத்து உங்களுடன் அளவளாவவோ வேண்டிய ஒழுங்குகள் செய்து தருவோம்.

### வெளிநாட்டுத் தந்திச் சேவை:

வெளிநாட்டிற்கு நீங்கள் அவசரமாக அனுப்பவேண்டிய தந்திகளை தாமதமின்றி உங்களிடம் பொறுப்பேற்று எமது ''பிறின்ரல்'' (ரெலெக்ஸ்மூலம் தந்தியனுப்புதல்) மூலமாக துரிதகதியில் அனுப்பிவைக்கிறோம்.

ரெலெக்ஸ் ரெலிபோன் சேவை எங்களுக்கு எம்மை முழுமையாக அர்ப்பணித்த தனித்துவத் தொழிலே. ஆகையால் எங்கள் முழு அக்கறையும் உங்களுக்கு அதி சிறந்த ரெலெக்ஸ் ரெலிபோன் சேவை அளிக்க வேண்டும் என்பதே. மேற் சொல்லப்பட்ட எமது சேவைகள் அனைத்தும் இரவு பகல் 24 மணித்தியாலமும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டேயிருக்கின்றன.

# தூளோபல்

யாழ்ப்பாணம் கொழும்பு



# Radio and Electronics Engineering Course

WEEK - END CLASSES

## யாழ். நகரில்

சகல தொழில் நுட்ப வசதிகளுடனுன எமது நவீன ஆய்வுகூடத்தில் இலங்கையில் தன்னிகரற்றுத் திகழ்ந்த ஆசிரியர்களிடமிருந்து கற்று நிறை பலன் பெற நாம் அளிக்கும்

## PART - I - 6 மாதம்

★ RADIO: பழுதறப் பழுது பார்க்கவும் பிறர் உதவியின்றி உருவாக்கவும்.
★ TAPE RECORDER
★ HI-FI STEREO AMPLIFIER
★ RADIOCONTROL
★ TRANSFORMER

} இவற்றோடு இன்னேரன்ன பல இலத்திரனியற்கருவிகள் யாவற்றின் அடிப்படை அமைப்புக்குரிய தெளிவான Theory and Practicals ம் அவற்றைப் பாரியமுறையில் உருவாக்கவும் பழுது பார்க்கவும்.

★ DIGITAL ELECTRONICS: Thery and practicals
★ ஒளியின் தாக்கத்தால் இயங்கும் இலத்திரனுக்குரிய கருவிகளை உருவாக்கவும்.
★ HI-FI Stereo Phonic Amplifiers, Battery Eleminators போன்ற பல இலத்திரனியற் கருவிகளும் விற்பனைத் தரத்தில் தயாரிக்கும் தொழில் நுட்பமும் புகட்டப்படும்.
★ பயிற்சி முடிவில் எம்மால் இலவசமாக வழங்கப்படும் உதிரிப் பாகங்களைக் கொண்டு உதவி எதுவுமின்றித் தாமாகவே வானெலியொன்றைச் செய்து முடிக்கும் திறமையைப் பெறுவதோடு அவற்றைப் பாரிய முறையில் உற்பத்தி செய்யும் தொழில் நுட்பத்தையும் பெற்றுக் கொள்வர்.
★ எமது தொழிற் கூடத்தில் வானெலி உதிரிப்பாகங்கள் உற்பத்தி செய்யும் முறையில் இலவச பயிற்சி அளிக்கப்படும்.

## PART - II - 3 மாதம்

★ T. V,
★ VIDEO RECORDERS } Theory and Practicals பழுது பார்த்தல்
★ பரீட்சை முடிவில் தேறுபவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.
★ வெளிநாடு செல்பவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு.

கட்டணம்: PART - I ரூபா 1500/-
PART - II ரூபா 1000/-

தவணை முறையிலும் கட்டணத்தைச் செலுத்தலாம்.

## ஆரம்பம்: 21—07—84

# CANTABIA INSTITUTE

21, MAIN STREET, JAFFNA.
T'PHONE 24201

## வடக்கு ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''மட்டக்களப்பு மண்முனே பாலத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியை கதிர்காமத்தில் யாத்திரிகர் மடம் கட்ட எடுப்பதனல், சிங்கள அரசாங்கம் தங்கள் பகுதியை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எதையும் எடுக்கவில்லே என்று மட்டக்களப்பு மக்கள் எண்ணுவதற்கு வாய்ப்பளிக்கும்'' என்முர். (இ-வெ)


**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி -சரோஜாதேவி
**இருவர் உள்ளம்**

**மனேகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர்- ஜெயலலிதா
**தாய்க்குத் தலைமகன்**
(புதிய பிரதி)

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30
ராஜன்-புஷ்பலதா
**பால்குடம்**
(புதிய பிரதி)

**வின்சர்** (யாழ். நகர்
தினசரி 10-30, 2-00, 4-30
7-00
DEATH TARP
13-7-84 முதல் நீங்கள்
ஆவலுடன் எதிர்பார்த்த
I THE JURY

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
4-30, 7-00
HAPPY HOOKER GOES HOLLYWOOD
(Strictly for Adults)

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,6-15
9, 10-7-84
எம்.ஜி.ஆர்.- ராதாசலுஜா
**இதயக்கனி**
11-7-84
**உத்தமன்**

**ஹரன்** (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30,6-15
ஜெய்சங்கர் - ஜெயசித்திரா
அசோகன்-V.S.ராகவன்
**பணக்காரப் பெண்**
(புதிய பிரதி)
வருகிறது
LADY CHATTERLEY'S COVER

**றீகல்** (யாழ். நகர்)
7th to 13 th
10-30, 2-15, 4-30, 6-30
Roger Moore as
James Bond 007
in
''MOON RAKER''
Action-packed
Bond Adventure
நுட்பமானஅதிநவீனரக
ஆயுதங்களுடன்
ஜேம்ஸ் பொன்ட்

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 4-45
7-00
FORCE FIVE
International Karate
(Color)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30,2-15, 4-30, 7-00
Charlet Heston
நடித்த
பல கோடி ரூபா செலவில்
தயாரிக்கப்பட்ட
EARTH QUACK
[சினிமாஸ்கோப்]
Full Suspense


## ஐக்கிய நாணய சங்க சமாசம்

(வண்ணுர்பண்ணே)

யாழ்ப்பாண மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இச் சமாசத்தின் தலைவி திருமதி.வேதவல்லி கந்தையா தலைமையில் நடைபெற்றது.

இச் சமாசத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவை கூட்டுறவு உதவி ஆணையாளர், திரு. எம் இக்பால் நடத்திஞர்.

தலைவராக திரு.வி.கே.சுப்பிரமணியம். உபதலைவராக திருமதி. வேதவல்லிகந்தையாவும், செயலாளராக திரு.க.மகாதேவனும், தனதிகாரியாக திரு.வை.வெங்கடாசல ஐயரும்,தெரியப்பட்டனர்.

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் ஒரு உறுப்பினர் வீதம் 13 செயற்குழு உறுப்பினர்களும்,விஷேட உறுப்பினர்கள் இருவரும் தெரியப்பட்டனர்.

## 40 கோழிகள் திருட்டு!

(மட்டுவில்)

நாற்பது கோழிகள் கூட்டுடன் திருடிய சம்பவம் ஒன்று கல்வயலில் நடைபெற்றுள்ளது.

கந்தையா சுப்பிரமணியம் என்பவரே இக் கோழிகளேயும் கூட்டையும் இழந்தவராவர். இது பற்றி சாவகச்சேரிப் பொலீசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இக் கோழித் திருட்டு சம்பந்தமாக இது வரை யாரும் கைது செய்யப்படவில்லே.

## சேவை நலம் பாராட்டு விழா

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கன்னியர் மடம் மகாவித்தியாலய அதிபர், அருட்செல்வி வலன்ரைன் அவர்கள் தமது அறுபதாவது வயதில் ஓய்வு பெறுவதையொட்டி நாளே சேவை நலம் பாராட்டு விழா நடைபெறவுள்ளது. வட்டாரக் கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன் தலைமையில் யாழ். கன்னியர் மடம் மகாவித்தியாலயத்தில் காலே 9 மணிக்கு இவ் விழா நடைபெறும்.

சங்கைக்குரிய சகோதரி வலன்ரைன் அவர்களைக் கௌரவித்துப் பாராட்டுமுகமாக நாளேக் காலே யாழ் ஆசனக் கோவிலில் நன்றித் திருப்பலிப் பூசையும்,நடைபெறும்

## புதிய ட்ராக்டர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலுள்ள குப்பைகளே விரைவில் அகற்றுவதற்காக சுமார் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் ட்ராக்டரும் டெயிலரும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

ட்ராக்டரும் டெய்லரும் இன்று யாழ்.நகர் வந்து சேரவிருக்கிறன மற்றும் ஒரு ட்ராக்டர்வாங்கவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது. (சு)

## நியமனம்

[சுழிபுரம்]

பண்ணுகம் மெய்கண்டான் மகாவித்தியாலய புதிய அதிபராக திரு.என்.சர்மா இம் மாதம் முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.


மூலப்பொருட்கள் விநியோகிக்கும் அரசாங்க தொடர்புள்ள நிறுவனத்திற்கு பின்வருவோர் தேவை.

(1) ஆங்கில தட்டச்சு/கணக்கியல் (Typing/Book Keeping)

(2) பொது லிகிதர் (General Clerk)

ஓய்வு பெற்ற அரசாங்க, தனியார் துறையினரும் விரும்பப்படுவர்.

விண்ணப்பிப்போர் சொந்தக் கையெழுத்தில், முன் சேவை அனுபவத்தையும், எதிர்பார்க்கும் ஊதியத்தையும் குறித்து 14-7-84க்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி;

**நிர்வாகி**
762) மே/பா ஈழநாடு விளம்பர இல: 762
யாழ்ப்பாணம்


## ஏல விற்பனே

குளிர்சாதனப்பெட்டி (DEEP FREEZER)

ஓராண்டு வரை பாவனேயிலிருந்த குளிர்சாதனப் பெட்டி ஒன்று Singer Deep Freezer) இம்மாதம் 15-ந் திகதி (15-07-84) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் ஏலத்தில் விற்பனேயாகும். இதனே இம்மாதம் 11-ந் திகதி தொடக்கம் 14-ந் திகதி வரை (11-07-84 — 14-07-84)வரை மாலே 4-00 மணிக்கும் 7-00 மணிக்குமிடையில் மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்கக் கட்டிடத்தில் பார்வையிடலாம். ஏலத்தில் வாங்குபவர் அதே தினத்தில் முழுப் பணத்தையும் செலுத்தவேண்டும்.

மு. அருளேயா,
செயலாளர்,

கிராம அபிவிருத்திச் சங்கம்,
மல்லாகம்,
07-07-1984. (731)

## அறிவித்தல்

ஸ்ரீலங்கா புகையிலேக் கைத்தொழிற்கூட்டுஸ்தாபனம் 11-07-84ல் இருந்து முன்புபோல் பீடி உற்பத்தியாளர்களுக்கு பீடிஇலே, புகையிலே விநியோகிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றது.

முன்பு கூட்டுஸ்தாபனத்தால் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டவர்களுக்கு 1984ம் ஆண்டுக்கும் வழங்கப்படும். புதிதாக அனுமதிப் பத்திரம் தேவைப்படுபவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:

நிர்வாகி
**ஸ்ரீலங்கா புகையிலேக்கைத்தொழிற் கூட்டுஸ்தாபனம்**
**153, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
761


**உஷா!!!** குளிர்சாதனப் பெட்டி

முற்பணம்: Rs. 2700/- மாதாமாதம்: Rs. 290/-
(5 வருட உத்தரவாதம்)

**த பிறுன்ஸ் கம்பனி லிமிட்டெட**
249, மின்சார நிலேய வீதி,
யாழ்ப்பாணம்-
தொலேபேசி: 23680

★ ரெலிவிசன், வீடியோ — டெக் றிப்பியறிங்
★ எலக்றிக்கல் வயறிங் ★ வெல்டிங்
★ ஏயர் கொண்டிசனிங்

குறைந்த கால தினசரி வகுப்புக்கள் கூடிய செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

★ COMPUTER PROGRAMMING
★ DIPLOMA IN HOTEL MANAGEMENT
FRENCH , GERMAN — வகுப்புக்கள்

பயிற்சிகள் மீண்டும் ஆரம்பம்: 14–07–84

**JAFFNA TECHNICAL INSTITUTE**

(றெயில்வே கடவை அருகாமை)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## 45- வது நாள் நினேவு அஞ்சலி

### செல்வி கோமதி முருகேசு

திகதி: 9 - 7 - 1984




தோற்றம்:
12 - 2 - 1957

மறைவு:
26 - 5 - 1984

என்றும் மறவாத தாய், தகப்பன் சகோதரங்கள் இறைவனடி சேர வேண்டுகிறேம். விலாசம் 60/1, ஆனந்தம் வடலி றேட், கொழும்புத்துறை.
779

## முதலாண்டு நினேவஞ்சலி

### சின்னத்துரை சோதிதாஸ்



மலர்வு:
23–12–1959

உதிர்வு:
21–06–1983

நினேவுக்கிரியைத் தினம்:
09–07–84

ஆலமரமென நீ வளர்ந்து எம்மை அரவணேக்கும் வேளேயிலே கோலவுரு மறைந்து ஈசனடி சேர்ந்தாய் வேரற்ற மரமாய் நாம் வீழ்ந்து வெம்புகிறேம், வேதனேயாற் துடிக்கிறேம்.

பண்பின் பிறப்பிடமே பாசத்தின் உறைவிடமே அன்பின் அணிகலனே நின் நினேவு என்றும் எம் நெஞ்சை விட்டகலாது.

தாய், தந்தை, சகோதர சகோதரிகள்,
சிறியதந்தை சிறிய தாய்மார், உறவினர்.

காளிகோவில் வீதி,
கரவெட்டி கிழக்கு. (657)

✶ பாராளுமன்றத்திலிருந்து —————— இ. கந்தசாமி

# ‘பயங்கரவாத நடவடிக்கைகள் கொழும்புக்கும் பரவிவிட்டது”

## சபையில் ‘அநுரா’ குற்றச்சாட்டு

(கொழும்பு)

இந்த நாட்டின் உயர் பீடமாம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்றத்தில் கடந்த புதனன்று திடீரென வீசிய சூறுவளி தலைமைக்கும் கட்டுப்படாத நிலையில் 5 நிமிட ஒத்திவைப்பினால் தானுகவே தணிந்தது.

‘‘மிகவும் அவமானத்துக்குரிய வார்த்தைப்பிரயோகம் என்றவாறு உபசபாநாயகரினல் வர்ணிக்கப்பட்ட அந்த சொற்போரின் நாயகர்கள் எதிர்க்கட்சித் தலைவரும் கொழும்பு மாவட்ட அமைச்சர் மல்லிமாராச்சியுமே.

### பல்கலைக்கழக மாணவர் விவகாரம்

‘‘பல்கலைக்கழக மாணவர் விவகாரம் குறித்து நான்கு எதிர்க்கட்சியின்ர் கடந்த வாரம் அனுராதபுரத்தில் பேச்சுவார்த்தை நடத்தியதை விமர்சித்த சிலர், நான்கு எதிர்க்கட்சிகளும் ஒரு ‘பியோனு’டனேயே பேச்சு நடத்தியுள்ளனர் என்று கூறியிருக்கின்றனர். இது மிகவும் கவலைக்குரியது என்று கூறிய மகரகம திணேஷ், அமரவும் கல்வி அமைச்சர் பேச எழுகிறுர்.

அப்போது திடீரென அரச தரப்பிலிருந்தும் எதிர்த்தரப்பிலிருந்தும் எழுந்த குரல்கள் சொற்போராக மாறின.

### பாராளுமன்ற நெறிமுறைக்கு ஒவ்வாத

இந்தச் சொற்போருக்கு மத்தியில் பாராளுமன்ற நெறிமுறைகளுக்கு ஒவ்வாத-சபையில் என்றுமே கேட்டிராத சில வார்த்தைப்பிரயோகங்களையும் கேட்கமுடிந்தது.

இதனிடையே அமைதியை நிலைநாட்ட முயன்ற உபசபாநாயகரின் குரலும் சற்றுக் கண்டிப்பாக எழுந்தன. எனினும் இருவரும் விடுவதாக இல்லை.

கல்வி அமைச்சரின் குரல் நான்காவதாக ஒலித்தது. சபையை ஐந்து நிமிடங்களுக்கு ஒத்திவைக்குமாறு ஆலோசனை கூறிஞர் அவர்.

5 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சபை மீண்டும் மாலை 6-18 மணியளவில் கூடியபோது இருவருமே சபையிடம் மன்னிப்புக் கேட்க வேண்டி ஏற்பட்டது. விவகாரமும் முற்றுப்பெற்றது.

### பயங்கரவாதம்

அன்றைய நிகழ்ச்சியின்போது இலங்கைக் கடற்படைக்கு மூன்று கப்பல்களைக் கொள்வனவு செய்வதற்காக 16 கோடி 82 லட்சத்து 19 ஆயிரத்து 5 ரூபா குறைநிரப்புப் பிரேரணையே முக்கியமாக விவாதிக்கப்பட்டதால் சகல உறுப்பினர்களும் குறிப்பாக வடக்கு-கிழக்கு பயங்கரவாத நடவடிக்கைகள் பற்றியும் சிறப்பாக கடல் கண்காணிப்பு வலயம் குறித்தும் நன்ருக அலசி ஆராய்ந்தார்கள்.

### ஆகாய கண்காணிப்பும் வேண்டும்

கப்பல்களை வாங்கிக் கடற்படையைப் பலப்படுத்துவதை தமது கட்சி எதிர்க்கவில்லை என்று கூறிய அனுராவும் லக்ஷ்மனும் இது காலம்கடந்த நடவடிக்கை என்றும் கடல் கண்காணிப்பை மட்டுமல்ல, ஆகாயமார்க்கமாகக் கண்காணிப்பையும் பலப்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டனர்.

அனுராவின் குற்றச்சாட்டுத் தொடருகிறது.

வடக்கு-கிழக்கில் 77-ம் ஆண்டுமுதலே வருடா வருடம் பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகரித்துவருகின்றன. வடக்கில் ஆயுதங்கள் தாராளமாக மிதக்கின்றன. தென் இந்திய கடல்மார்க்கமும் இதற்குக் காரணமாக இருக்கலாம். அவ்வாறிருந்தும் எமது கடற்படை இதுவரை பலப்படுத்தப்படவில்லை.

பயங்கரவாத நடவடிக்கைகள் உச்ச நிலையை அடைந்திருந்த வேளையில் 82, 83-ம் ஆண்டுகளில்கூட பட்ஜட்டில் கடற்படைக்குப் போதிய நிதி ஒதுக்கப்படவில்லை. ஏன் கடந்த நவம்பரில்கூட அது பற்றிச் சிந்தித்துப்பார்க்கவில்லை. அந்தப் பட்ஜட்டில் கூட.

(நாளை தொடரும்)

## ரூ. 1 லட்சம் பிணையில் சந்தேகநபர் அனுமதி

(யாழ்ப்பாணபு)

வெளி நாட்டில் வேலைபெற்றுத் தருவதாக கூறி மோசடி செய்ததாக தொடர்ந்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருலட்ச ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ், நாகராசா முன்னிலையில் சந்தேக நபர் நேற்று ஆஜர் செய்யப்பட்டார்.

மல்லாகத்தைச் சேர்ந்த சந்தேக நபரான முருகேசு ஜெயராசா என்பவர் வெளிநாட்டில் வேலைபெற்றுத் தருவதாக கூறி நீர்வேலியைச் சேர்ந்த ஐந்து பேரிடம் 1,40.000 ரூபா பெற்றுக்கொண்டு அவர்களை வெளிநாட்டுக்கு அனுப்பாமல் அப்பணம் முழுவதையும் மோசடி செய்ததாக, பொலிஸில் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து சந்தேக நபரான முருகேசு ஜெயராசா கைதுசெய்யப்பட்டு கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டார்.

சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம், சட்டத்தரணி பி. கனகசபாபதியின் அனுசரணையுடன் ஆஜராகி சந்தேக நபரை பிணையில் விடுமாறு கோரிஞர்.

நீதவான் சந்தேக நபரை ஒரு லட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்து விசாரணையை இம்மாதம் 18-ம் திகதிவரை ஒத்திவைத்தார். (க)

## விசுவமடுவில் கருத்தரங்கு

[வேலணை]

விசுவமடு குடியேற்றத் திட்டத்தில் சேவையாற்றி வரும் றெட்பாரு நிறுவனம் அங்கு குடியேறி இருக்கும் குடியேற்றத் திட்ட வாசிகளின் நன்மை கருதி நாளை செவ்வாய்க்கிழமை காலை சமூக அபிவிருத்தி கருத்தரங் கொன்றினை நடாத்த ஒழுங்குகளைச் செய்திருக்கிறது.

கருத்தரங்கில் விஷகடி வைத்தியம் பற்றியும்‘அதற்கான முதலுதவி பற்றியும் உரையாற்ற யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த விஷகடி வைத்திய நிபுணர் திரு. கதிரவேலு சிற்றம்பலம் ஆசிரியரை றெட்பாரு நிறுவனம் அழைத்திருக்கிறது.

## பதநீர் உற்பத்தி வீழ்ச்சி

(சாவகச்சேரி)

பதநீர் உற்பத்தி வீழ்ச்சி காரணமாகவும் பனைவெல்லம் விற்பனை குறைவு காரணமாகவும், சாவகச்சேரி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் பதநீர் உற்பத்தியை நிறுத்திக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிய வந்துள்ளது.

பதநீர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சங்க அங்கத்தவர்களின் வருமானம் மிகக் குறைவாகக் காணப்படுவதால் அவர்கள் பதநீர் இறக்குவதில் அதிகம் நாட்டம் காட்டாமல் இருந்து வருவதும் காணக்கூடியதாக வுள்ளது.

## மரண அறிவித்தல்

### சோ. சண்முகசுந்தரம்

மத்திய வங்கி சிரேஷ்ட உதவிக் கட்டுப்பாட்டதிகாரி சண்முகசுந்தரம் காலமாஞர். இவர் இளைப்பாறிய O. A. சோமசுந்தரத்தின் அன்புமகனும், கனகாம்பிகையின் அன்புக்கணவரும், சுபாஷினி, சுகந்தி (பவர் அன் கம்பனி), சுமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி சண்முகநாயகி கந்தையா, காலஞ்சென்ற திருமதி ஆனந்தலக்ஷ்மி துரைசிங்கம் ஆகியோரின் சகோதரரும், திருமதி மகேஸ்வரி நல்லசேகரம், இரத்தினசபாபதி (அரச திரைப்படக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் மைத்துனருமாவார் அன்ஞரின் ஈமைக் கிரியைகள் 117/3, அத்தியடி பிள்ளையார் கோவில் வடக்கு வீதியிலுள்ள அன்ஞரின் இல்லத்தில் இன்று 9-ந் திகதி (திங்கட்கிழமை) நடைபெற்று பிற்பகல் 3-30 மணிக்கு தகனக் கிரியைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

787

## இன்று

(வேலணை)

யாழ்ப்பாணம் சென். சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி கல்லூரி அதிபர் திரு. எஸ். குணநாயகம் தலைமையில் இன்று திங்கட்கிழமை நடைபெறவிருக்கின்றது.

## வன்முறை—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தியா இலங்கையின் இனப் பிரச்னையில் தலையிடவேண்டியிருந்தது.

‘இலங்கையின் இனப்பிரச்னைக்குத் தீர்வுகாணக் கூட்டப்பட்ட வட்டமேசை மகாநாட்டின் பேச்சுக்கள் நம்பிக்கை தருவதாகவுள்ளன.

‘இந்தப் பேச்சுக்கள் வெற்றி பெறுவதற்கான சகல முயற்சிகளையும் இந்தியா மேற்கொள்ளும்’’ என்ருர். (வெ)

## பிணையில்அனுமதி

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு நகைக் கொள்ளை வழக்கில் எதிரி 3000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் இப் பிணை மனு எடுக்கப்பட்டது.

புங்குடுதீவு நா. செல்லம்மா, அவரதுமகள் லிங்கேஸ்வரி ஆகியோரின் நகைகளைக் கொள்ளையடித்ததாக வி. அம்பிகைபாலன் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரியை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கோரி எதிரியின் தாயார் சட்டத்தரணி எம். சிறிகாந்தா மூலம் பிணை மனு தாக்கல் செய்திருந்தார்.

நீதிபதி எதிரியை 3000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் ஆஜராக வேண்டுமென்றும், சாட்சிகளுடன் தலையிடக் கூடாதென்றும் தெரிவித்தார். (க)

## மரண அறிவித்தல்

### வீரகத்தி- விஞசித்தம்பி (முத்து)

அரியாலை, வீரகத்தி விஞசித்தம்பி (முத்து) காலமாஞர் இவர் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும், விவேகானந்தன் (Prispon) உத்தியோகத்தர் யாழ்ப்பாணம்) விக்னேஸ்வரன் [பிராஸ்] ஆகியோரின் அருமைத்தந்தையும், ஆரியநந்தினியின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான வள்ளிப்பிள்ளை, முருகேசு ஆறுமுகம் குமரேசு, திரு. இராமசாமி ஆகியோரின் அன்புச்சகோதரனும், திருவாளர்கள் தம்பிஐயா, நல்லையா, திருமதி சின்னம்மா அரியகுட்டி ஆகியோரின் அன்புமைத்துணருமாவார்

அன்ஞரின் ஈமைக்கிரியைகள் 90/1 புங்கன்குளம் வீதி, அரியாலையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று (9-7-84) திங்கட்கிழமை மாலை 4½ மணிக்கு தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர் உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

788

## மரண அறிவித்தல்

### திருமதி கற்பகம் நவரெட்ணம்

திருமதி கற்பகம் நவரெட்ணம் காலமாஞர். இவர் காலஞ்சென்ற திரு. C. நவரெட்ணம் (தபால் அலுவலக மாவட்ட அத்தியட்சகர்) அவர்களின் அன்பு மனைவியும், டாக்டர் நவநீதராசா (நவம்) U. K., தவநீதராசா (தவம்) (முன்னைநாள் ரோயல் கல்லூரி ஆசிரியர்) அவர்களின் அன்புத்தாயாரும், ஜெசி நவநீதராசா U. K., உமா தவநீதராசா (ஆசிரியை) அவர்களின் அன்பு மாமியாரும், சஞ்சயன், பிரிதீபா, பிரதீபன் அவர்களின் அன்புப் பேத்தியுமாவார். அன்ஞரின் ஈமக்கிரியைகள் நாளை 10-07-84 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு உரும்பிராயில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

குறுக்கட்டு, உரும்பிராய். 782

## மரண அறிவித்தல்

### அந்தோனிப்பிள்ளை ஜேம்ஸ்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. அந்தோனிப்பிள்ளை ஜேம்ஸ் காலமாகிவிட்டார். இவர் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர் ஆவார். அன்ஞர் திருமதி இரத்தினத்தின் அன்புக் கணவரும், திருமதி வசந்தி மரியதாசன் [France], திரு. சந்திரன் [East West (C and F) Ltd], திருமதி லலிதா ரவீந்திரன் திரு. இந்திரன் (France), செல்வி நீற்ரர ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. இன்ஞசிமுத்து மரியதாசன் [St. Joseph College, Bandarawela] திருமதி சந்திரவதனி, திரு. ரவீந்திரன் ஜோக்கீம் (France) திருமதி பெஞேருஜி (France) ஆகியோரின் அன்பு மாமஞரும் திரு. சூசைப்பிள்ளை, திரு. இராயப்பு அருட்திரு. சகோதரர் தோமஸ் (திருகோணமலை), ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி சிசிலியா ஜோண், திரு. A. E. பிறின்ஸ் (அரசாங்க மரக்கூட்டுத்தாபன உதவி முகாமையாளர், வடபிராந்தியம்), காலஞ்சென்ற A. J. விஜயன் ஆகியோரின் மைத்துனரும், நிகால், சுரேன், சுவீட்ரி, ருஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்ஞரின் பூதவுடல் யாழ்ப்பாணம், 58, ரெம்பிள் ரோட் இல்லத்திலிருந்து இன்று 9-7-84 திங்கட்கிழமை மாலை 4-30 மணிக்கு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

785

இப் பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜூலை மாதம் 9ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.